Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ் Mirror

www.tamilmirror.lk

SATURDAY, AUGUST 28, 2021

சனிக்கிழமை ஓகஸ்ட் 28, 2021 | ஒளி: 07 கதிர்: 86 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | FREE



## தனிமைப்படுத்தல் ஊரடங்கு

# 14 நாள்கள் முடக்கவும்

உரிய பெறுபேறுகளை பெற்றுக்கொள்ள வேண்டுமாயின், குறைந்தபட்சம் 14 நாள்கள் பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட வேண்டும் என இலங்கை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

தற்போது அமல்படுத்தப்பட்டுள்ள பயணக் கட்டுப்பாட்டு காலமானது போதுமானதாக இல்லை என சங்கத்தின் தலைவர், உபுல் ரோஹன குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2

# 7 நாள்களுக்கு நீடிப்பு

ஓகஸ்ட் மாதம் 30ஆம் திகதி அதிகாலை 4 மணிவரையிலும் அமலில் உள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கு, எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 6ஆம் திகதி அதிகாலை 4 மணிவரை தொடர்ந்து நீடிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில், நேற்று (27) நடைபெற்ற கொரோனா ஒழிப்புச் செயலணிக் கூட்டத்தின்போது, இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## தமிழ்நாடு முதலமைச்சருக்கு சுரேன் ராகவன் எம்.பி நன்றி

தமிழ்நாட்டில் வாழும் இலங்கை தமிழர்களுக்கு பல்வேறு திட்டங்களையும் சலுகைகளையும் அறிவித்துள்ள தமிழ்நாட்டின் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு இலங்கையின் முன்னாள் வடக்கு மாகாண ஆளுநரும் பாராளுமன்ற உறுப்பினருமான கலாநிதி சுரேன் ராகவன் நன்றி தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2



## இலங்கை தமிழர்களுக்கு சிறப்புத் திட்டங்கள் அறிவிப்பு

தமிழகத்தில் இலங்கை தமிழர்களின் மேம்பாட்டுக்காக, பல்வேறான திட்டங்களை தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், சட்டப்பேரவையில் நேற்று (27) அறிவித்தார். அவர்களின் அடிப்படை கட்டமைப்புகளை மேம்படுத்த ரூ.30 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது என்றார்.

தொடர்ச்சி P2



## உயிர்வாழும் உரிமையை உறுதிப்படுத்தவும்



கொரோனா தொற்று உருவான சீனாவில் தொற்றால் உயிரிழந்தவர்களை விட, இரண்டு மடங்கை விட அதிகமானவர்கள் தற்போது, இந்தச் சிறிய நாட்டில் உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவித்த எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ, தொழிங்சங்கவாதிகள், அரசியல்வாதிகள், வர்த்தகர்கள், விளையாட்டு வீரர்கள், ஆசிரியர்கள், நாட்டின் எதிர்காலத் தலைவர்களான சிறுவர்கள் எனப் பலரையும்

தொடர்ச்சி P2

## 27 நாள்களில் 10 பொலிஸார் கொரோனாவால் மரணம்

### வீடு திரும்பினார் அஜித்



இந்த மாதத்தில் மாத்திரம் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான 10 பொலிஸார் மரணித்துள்ளனர் என பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன்படி, கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக இதுவரை 27 பொலிஸார் மரணித்துள்ளனர்.

தொடர்ச்சி P2



## தடுப்பூசி

கொரோனா தடுப்பூசியை செலுத்தும் செயற்பாடுகள் விஹாரமஹாதேவி பூங்காவில், இலங்கை இராணுவத்தால் நேற்றும் (27) முன்னெடுக்கப்பட்டது. ஓய்வுபெற்ற இராணுவத்தினரால் இப்பணிகள் முன்னெடுக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (படம்: பிரதீப் பத்திரண)



## 458 கி.கி உலர் மஞ்சள் மீட்பு

ரஸீன் ரஸ்மின்



கற்பிட்டி, இப்பந்தீவு பகுதியில் மிகவும் சூட்சுமமான முறையில், 21 உர மூடைகளில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 458 கிலோகிராம் உலர்ந்த மஞ்சள் கைப்பற்றப்பட்டுள்ளதாக கடற்படையினர் தெரிவித்தனர்.

வடமேற்கு கடற்படை கட்டளையின் விஜய கடற்படையினர், இப்பந்தீவு பகுதியில் நேற்று (27) மேற்கொண்ட விசேட தேடுதல் நடவடிக்கையின் போதே, இந்த உலர்ந்த மஞ்சள் கைப்பற்றப்பட்டுள்ளது.

எனினும், இந்தச் சுற்றிவளைப்பின் போது எவரும் கைது செய்யப்படவில்லை என்றும் கடற்படையினர் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2

## "கொவிட் சாதாரண காய்ச்சலே"

### எஸ்.பி விளக்கம்

நாட்டை முடக்குவது, கொவிட் ஒழிப்புக்கு தீர்வாக அமையாது என, உலகளாவிய மட்டத்திலான வைத்திய நிபுணர்கள் வெளியிட்ட அறிக்கையை அடிப்படையாகக் கொண்டே கொவிட் தாக்கத்தை சாதாரண காய்ச்சல் என்று குறிப்பிட்டேன் என பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி திஸாநாயக்க தெரிவித்தார்.

தனது கருத்தை விமர்சிப்பவர்கள் உலகளாவிய வைத்தியர்களின் ஆலோசனைகளை முதலில் ஆராய வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

### ஆப்கானியர்களைக் கைவிட்டதை போல்

## தமிழர்களை கைவிடக்கூடாது



ஆப்கானியர்களை 'அம்போ' எனக் கைவிட்டதை போல், தமிழர்களைக் கைவிடக்கூடாது என தமிழ் முற்போக்குக் கூட்டணித் தலைவர் மனோ கணேசன் எம்.பி கேட்டுக்கொண்டுள்ளார்.

ஜோ பைடன் நிர்வாகத்தில் இலங்கை இனப்பிரச்சினை முன்னுரிமை பெற்ற ஒரு பிரச்சினையாக

தொடர்ச்சி P2

## பிரதமருக்கு சுகவீனம்? மறுத்தார் யோஷித



பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ சுகவீனமடைந்துள்ளார் என்ற செய்தி பொய்யானது எனத் தெரிவித்துள்ள பிரதமர் பணியாட் குழாமின் பிரதானியான யோசித்த ராஜபக்ஷ, வதந்திகளை பரப்பவேண்டாம் என்றும் கேட்டுக்கொண்டுள்ளார்.

தொடர்ச்சி P2

### க.பொ.த. உ/த, புலமைப் பரிசில் பரீட்சைகளுக்கு

## விண்ண்ணப்பிக்கும் காலம் நீடிப்பு

2021ஆம் ஆண்டுக்கான கல்வி பொதுத் தராதரப் பத்திர உயர்தரம் மற்றும் 5ஆம் தர புலமை பரிசில் பரீட்சைகளுக்கான விண்ணப்ப காலம் நீடிக்கப்பட்டுள்ளதாக, பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதன்படி, குறித்த பரீட்சைகளுக்குத் தோற்றவுள்ளோர் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 15ஆம் திகதி வரையில் விண்ணப்பிக்க முடியும் என்று, அறிக்கையொன்றை வெளியிட்டு பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் பி.சனத் பூஜித அறிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2



## காபூல் விமான நிலையத்தில் இரட்டை குண்டுவெடிப்பு

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூல் விமான நிலையத்துக்கு அருகே நேற்று முன்தினம் (26) இரவு இரட்டைக் குண்டு வெடிப்புத் தாக்குதல் நடத்தப்பட்டது. இந்தத் தாக்குதலில் 73 பேர் உயிரிழந்துள்ளனர். உயிரிழந்தவர்களில் 13 பேர் அமெரிக்க பாதுகாப்பு படை வீரர்கள் ஆவர். எஞ்சிய 60 பேரில் 3 குழந்தைகள் உள்ளிட்ட ஆப்கானியர்கள் ஆவர்.

தொடர்ச்சி P2

## 75 சதவீதமான கைதிகளுக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது



நாட்டிலுள்ள சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளில் 75 சதவீதமானோருக்கு சினோர்ஃபாம் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

## மூடியதில் பிரயோசனம் இல்லை விஞ்ஞான ரீதியில் முடக்கவும்

### சகல வாகனங்களும் ஓடுகின்றன; மக்கள் வீதிகளில் திரிகின்றனர்



தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் சட்டவிரோதமானது. அந்தச் சட்டத்தை நீடிப்பதால் எவ்விதமான பிரயோசனமும் இல்லை. ஆகையால், விஞ்ஞான ரீதியில் நாட்டை முடக்குவதற்கு நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவன் விஜயவர்தன தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## இழுத்துப் பூட்டியதால் ரூ.500 கோடி நட்டம்

மதுபான சாலைகளை 10 நாள்களுக்கு மூடியமை காரணமாக 500 கோடி ரூபாய் வரி வருமானம் இழக்கப்பட்டுள்ளதாக கலால் வரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மதுபான சாலைகளை ஒரு நாள் மூடுவதால் அரசாங்கத்துக்கு 50 கோடி ரூபாய் நட்டம் ஏற்படுவதாக திணைக்களத்தின் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.




இதேவேளை, நாட்டை ஒரு நாளைக்கு மூடுவதன் ஊடாக, 1,500 கோடி ரூபாய் நட்டம் ஏற்படுகின்றது என நிதியமைச்சு அறிவித்துள்ளது.

PAGE 1 தொடர்ச்சிகள்

# 14 நாள்கள் முடக்கவும்

நாட்டில் தொடர்ச்சியாக அதிகமான கொரோனா நோயாளர்கள் பதிவாவதுடன், இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என அவர் கூறினார்.

உரியவாறு பயணக் கட்டுப்பாடு அமுல்படுத்தப்பட்டால், எதிர்வரும் செப்டெம்பர் மாதம் நடுப்பகுதியில் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்படலாம் என உபுல் ரோஹன தெரிவித்தார்.

தற்போது பயணக் கட்டுப்பாடு அமுல்படுத்தப்பட்டுள்ள போதிலும், வீதிகளில் அதிகளவான வாகனங்கள் பயணிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# 7 நாள்களுக்கு நீடிப்பு

கடந்த 20 ஆம் திகதி இரவு 10 மணிக்கு அமுல்படுத்தப்பட்ட தனிமைப்படுத்தல் ஊரடங்கு, ஒகஸ்ட் 30ஆம் திகதி அதிகாலை 04 மணி வரை இருக்குமென முன்னதாக அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், மேலும் 06 நாள்களுக்கு நீடித்து, தற்போது செப்டெம்பர் 6ஆம் திகதி அதிகாலை 4 மணி வரை தனிமைப்படுத்தல் ஊரடங்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, இந்தக் காலப்பகுதியில் அத்தியாவசிய சேவைகள், மருந்து உற்பத்தி மற்றும் விநியோகம், ஏற்றுமதி, விவசாயம், ஆடை கைத்தொழில் உள்ளிட்ட பிரிவுகள் எவ்வித இடையூறுமின்று சேவைகளை முன்னெடுக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா ஒழிப்புச் செயலணிக் குழுவின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா இது தொடர்பில் விளக்கியுள்ளார்.

மருந்தகங்கள், ஆடை, தொழிற்சாலைகள், விவசாய நடவடிக்கைகள் உள்ளிட்ட அத்தியாவசிய சேவைகளில் ஈடுபடுபவர்களுக்கு இந்தத் தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவு செல்லுபடியாகாது என அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில், சோதனைச் சாவடிகளில் இராணுவம், பொலிஸார் நெகிழ்வுத்தன்மையுடன் இருக்குமாறும் அவரால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், இக்காலப் பகுதியில் கொரோனா தடுப்பூசி ஏற்றும் திட்டமும் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் தெரிவித்த இராணுவத் தளபதி, தொற்றுப் பரவாமல் தடுக்க தேவையற்ற பயணங்களைத் தவிர்க்குமாறும் சுகாதார அறிவுறுத்தல்களை இறுக்கமாகக் கடைப்பிடிக்குமாறும் பொதுமக்களை வலியுறுத்தினார்.

# பிரதமருக்கு சுகவீனம்? மறுத்தார் யோஷித

அவர், உடல் நலத்துடன் இருக்கின்றார். அத்துடன், பிரதமர் தனது பணிகளை வழமைபோன்று முன்னெடுக்கின்றார் என்றும் யோசித்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார் என செய்திகள் வெளியாகியுள்ளன.

# விண்ணப்பிக்கும் காலம் நீடிப்பு

கொரோனா தொற்று அச்சம் காரணமாக பாடசாலைகள் மூடப்பட்டுள்ளமை மற்றும் நாட்டில் அமுல்படுத்தப்பட்டுள்ள ஊரடங்கு சட்டத்தை கருத்திற்கொண்டு விண்ணப்ப கால எல்லையை நீடிக்கத் தீர்மானித்துள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

புலமைப் பரிசில் பரீட்சையை, நவம்பர் 14ஆம் திகதி நடத்துவதற்கும் உயர்தரப் பரீட்சையை நவம்பர் 15ஆம் திகதி முதல் டிசெம்பர் 10 திகதி வரையில் நடத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# "கொவிட் சாதாரண...

பொதுஜன பெரமுனவின் அலுவலகத்தில் நேற்று (27) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், "கொவிட் வைரஸ் தாக்கத்தை கருத்திற்கொண்டு, நாட்டை முழுமையாக முடக்கினால், உளவியல் ரீதியில் மக்கள் பாதிக்கப்பட்டு, தற்கொலை செய்துகொள்வார்கள். இலங்கையில் கொவிட் தொற்றால் பதிவாகும் மரணங்கள் 1.9 சதவீதமாக காணப்படுகிறது. காய்ச்சல், இருமல் ஆகிய அறிகுறிகள் ஊடாக 14 சதவீதமானோர் சிறிதளவு சிரமமடைந்து குணமடைந்துள்ளார்கள்.

# 75 சதவீதமான கைதிகளுக்கு தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது

சுமார் 20,000 கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையில், அவர்களில் 15,000 பேர், முதலாவது தடுப்பூசியை பெற்றுக்கொண்டுள்ளனர் என சிறைச்சாலைகள் ஊடகப்பேச்சாளர் சந்தன ஏக்கநாயக்க குறிப்பிட்டார்.

அதற்கமைய, இதுவரை கொரோனா தடுப்பூசியை பெற்றுக்கொள்ளாத ஏனைய கைதிகளுக்கும் எதிர்வரும் நாள்களில் தடுப்பூசி ஏற்றப்படும் என சிறைச்சாலைகள் ஊடகப்பேச்சாளர் கூறினார்.

இதனிடையே, அனைத்து சிறை அதிகாரிகளுக்கும் இரண்டு தடுப்பூசிகளும் ஏற்றப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார்.

# இலங்கை தமிழர்களுக்கு சிறப்புத் திட்டங்கள் அறிவிப்பு

அதன்படி, இலங்கை தமிழர்கள் முகாம்களில் உள்ள 7,469 பழுதடைந்த வீடுகள் 231 கோடி ரூபாய் செலவில் கட்டித்தரப்படும் என்றும், அவர்களின் பிள்ளைகளின் கல்விக்காக 5 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தகவலும் அறிவித்தார்.

மேலும், இலங்கை வாழ் தமிழர்களுக்கு குடியுரிமை வழங்குதல், இலங்கை திரும்ப விரும்பும் பகுதிகள் ஆய்வு செய்தல் ஆகிய கோரிக்கைகளை நிறைவேற்றிட பாராளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர், பொதுத் துறை செயலாளர், முகாம்வாழ் தமிழர்களுக்கான பிரதிநிதி அடங்கிய குழு அமைக்கப்படும்.

அத்துடன், இலங்கை வாழ் தமிழர்களுக்கு மேம்படுத்தப்பட்ட வாழ்க்கையை அமைத்துத் தருவதை அரசு உறுதி செய்யும்.

மேலும், இலங்கை தமிழ் பாலிடெக்னிக் மாணவர்களுக்கு ரூபாய் 2,500லிருந்து ரூபாய் 10,000 ஆகவும், கலை, அறிவியல் மாணவர்களுக்கு ரூபாய் 3,000 இல் இருந்து ரூபாய் 12,000 ஆகவும், இளநிலை தொழில்கல்வி மாணவர்களுக்கு ரூபாய் 5,000 இல் இருந்து ரூபாய் 20,000 ஆக உதவித் தொகை உயர்த்தப்படும் என்றும் முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

அத்துடன், இலங்கைத் தமிழர்கள் மீது நிலுவையில் உள்ள வழக்குகளை விரைந்து முடிக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்று சட்டப்பேரவையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார்.

# தமிழ்நாடு முதலமைச்சருக்கு சுரேன் ராகவன் எம்.பி நன்றி

110 விதியின் கீழ் இந்த அறிவிப்பினை தமிழக முதலமைச்சர் கௌரவ மு.க.ஸ்டாலின் நேற்று (27) முற்பகல் தமிழ்நாடு சட்டப்பேரவையில் அறிவித்ததை வர வேற்றுள்ள கலாநிதி சுரேன் ராகவன், இந்த மனிதாபிமானம் மிக்க செயற்பாட்டிற்காக முதலமைச்சரை பாராட்டியுள்ளார்.

வடக்கு மாகாண ஆளுநராக கலாநிதி சுரேன் ராகவன் பணியாறிய வேளையில் 2019 ஆம் ஆண்டு நவம்பர் 11ஆம் திகதி யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையத்திலிருந்து முதலாவது உத்தியோகபூர்வ விமான சேவையை ஆரம்பித்து தமிழ்நாட்டுக்கு விஜயம் மேற்கொண்டிருந்த கலாநிதி ராகவன் , அப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த தற்போதைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை 12ஆம் திகதி சந்தித்திருந்தார். இதன்போது தமிழகத்தில் வசிக்கும் இலங்கைத் தமிழர்களின் நலன்கள் குறித்து கலந்துரையாடி இருந்ததுடன் இலங்கை தமிழர்களுடைய நலன்களுக்கென விசேட பிரிவொன்றை உருவாக்குமாறும் கோரிக்கை விடுத்திருந்தார்.

அத்துடன் முதலமைச்சராக பதவியேற்றபோதும் மு.க.ஸ்டாலினை வாழ்த்தி அனுப்பி வைத்த கடிதத்திலும் தமிழ் நாட்டிலுள்ள இலங்கை தமிழர்கள் தொடர்பில் விசேட பிரிவொன்றை அமைக்கவும் கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தமிழர்களை கைவிடக்கூடாது

இருக்க வேண்டும். இதை தூதுவர் அலைனா டெப்லிட்ஸ் அறிய வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் நேற்று (27) அவர் அனுப்பியுள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது,

அரசாங்க - கூட்டமைப்பு பேச்சுவார்த்தை யோசனையை நாம் வரவேற்கின்றோம். ஐ.நா மனித உரிமை ஆணையக அவை நடக்க உள்ள இந்த வேளையில், இந்தப் பேச்சு சந்தேகத்தை கிளப்புவது இயல்பானதே. உண்மையில் சந்தேகப்பட தேவையில்லை. இதுதான் உண்மை காரணம். இலங்கையில் இன்று தேசிய நெருக்கடி ஏற்பட்டு வருகிறது. ஆகவே, பேச வேண்டிய தேவை அனைத்து தரப்புக்கும் ஏற்படுகிறது.

இதற்கு அனுசரணை வழங்குகின்ற அமெரிக்க அரசாங்கம் வழமைபோல் தமிழர்களை கைவிடக்கூடாது. சமீபத்தில், ஆப்கான் நாடு மக்களை அம்போ என அமெரிக்க அரசு கை விட்டது என அமெரிக்க மக்களே கூறுகிறார்கள்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு மட்டுமல்ல, ஏனைய தமிழ்க் கட்சிகளுடனும் இலங்கை அரசு பேச வேண்டும். அனைத்து தமிழ்க் கட்சிகளும் இத்தகைய ஒரு அரங்கத்தை ஏற்படுத்த வேண்டும். அதற்கு கூட்டமைப்பு ஆவன செய்ய வேண்டும் என அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

# முடியதில் பிரயோசனம் இல்லை விஞ்ஞான ரீதியில் முடக்கவும்

தற்போது அமலில் இருக்கும் தனிமைப்படுத்தல் ஊரடங்கு, நாட்டை திறந்து வைத்திருப்பதற்கு சமாந்தரமானது. மக்கள் வீதிகளுக்கு இறங்கியிருந்தால், நாடு முடக்கப்படுவதற்கும் சுகாதாரப் பிரிவினர் எதிர்பார்த்திருப்பதற்கும் எவ்விதமான பிரயோசமும் இல்லையெனத் தெரிவித்த அவர், கொரோனா வைரஸ் தொற்றுப் பரவாமல் இருக்கவேண்டுமாயின் நாட்டை வீடுகளுக்குள்ளே முடக்கி வைத்திருக்கவேண்டும் என்றார்.

பெருந்தெருக்களுக்கு வராத சகல வாகனங்களும் வீதிகளில் ஓடுகின்றன. முன்னர் இருந்ததைப் போல, மக்கள் வீதிகளில் இருக்கின்றனர். இதனை தடுத்து நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்கவேண்டும்.

விஞ்ஞான முறைமையின் அடிப்படையில் நாட்டை முடக்கவேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கோரிக்கையை விடுத்துள்ளார். சரிந்திருக்கும் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கான யோசனைகளையும் அவர் முன்வைத்துள்ளார் என்றும் ருவன் விஜயவர்தன மேலும் தெரிவித்தார்.

நீண்டகால தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அர்த்தமுடையதாக இருக்கவேண்டுமாயின் விஞ்ஞான ரீதியில் ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்தவேண்டும் என்றும் ருவன் விஜயவர்தன மேலும் தெரிவித்தார்.

# உயிர்வாழும் உரிமையை உறுதிப்படுத்தவும்

இழந்துள்ளதன் அதிர்ச்சி தனக்கு தனிப்பட்ட ரீதியில் உள்ளது.

எனவே, நாட்டைக் கட்டியெழுப்புதல் அல்லது அபிவிருத்தி செய்வதற்கான குறிப்பைக் கூட இந்த அரசாங்கத்தால் வழங்க முடியாது என்பதை இந்த அரசாங்கமே நிரூபித்துள்ளது, நாட்டு மக்களின் உயிர்வாழும் உரிமையை மாத்திரமாவது உறுதிப்படுத்துமாறு நாம் கோரிக்கை விடுக்கின்றோம்.

இதுமாத்திரமின்றி நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்லும் சீனியின் விலையை தன்னாலும் ஏற்றுக்கொள்ள முடியவில்லை என நுகர்வோர் பாதுகாப்பு அமைச்சர் கூட கருத்துத் தெரிவிக்கும் அளவுக்கு விலை அதிகரிப்புச் சென்றுள்ளது.

சீனி வரி மோசடியால் ரூ.20 பில்லியன் பாரிய நட்டம் ஏற்பட்டுள்ளமை குறித்து, நாம் ஜனவரி மாதம் பாராளுமன்றத்தில் சுட்டிக்காட்டியிருந்தோம். எனவே, சீனியின் விலை அதிகரிப்பின் பொறுப்பை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றார்.

அத்துடன், தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவு பிறப்பித்து நாட்டை முடக்கினாலும் அது எந்தளவு தோல்வி என்பது வீதியில் பயணிக்கும் அத்தியாவசியமற்ற வாகனங்கள் மூலம் பார்க்க முடிகிறது. தினமும் இவ்வாறான அதிகரித்த மரணங்கள் பதிவாகும் நிலையில், முழு உலகமும் இத்தொற்று குறித்து பாரிய அச்சத்துடன் இருக்கும் நிலையில், அரசாங்கத்தின் சில உறுப்பினர்கள் கொரோனா தடிமன் போன்று சாதாரண நோய் என கூறுகின்றனர் என்றார்.

# 458 கி.கி உலர் மஞ்சள் மீட்பு

சட்டவிரோதமாக நாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட உலர்ந்த மஞ்சள், உள்ளூர் பகுதிகளுக்கு விற்பனைக்காக கொண்டு செல்லும் நோக்கில் இந்தப் பகுதியில் பதுக்கி வைக்கப்பட்டிருக்கலாம் என தாம் சந்தேகிப்பதாகவும் கடற்படையினர் தெரிவித்தனர்.

கைப்பற்றப்பட்ட உலர்ந்த மஞ்சள், சுகாதார வழிகாட்டுதலுக்கு அமைய கொரோனா தொற்று நீக்கி தெளிக்கப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைக்காக ஒப்படைக்கப்படும் வரை கடற்படையின் பொறுப்பில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் கடற்படையினர் மேலும் தெரிவித்தனர்.

இதேவேளை, கற்பிட்டி பிரதேசத்தில் நான்கு நாள்களில் மாத்திரம் 1,978 கிலாகிராம் உலர்ந்த மஞ்சள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், நால்வர் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## அறிவித்தல்

### ஹரிச்சந்திரா மில்ஸ் பிஎல்ஸி – PQ 225

### அதிவிசேட பொதுக்கூட்டம்

கீழ்க்காணும் இந்த அறிவித்தலின் பிரகாரம், ஹரிச்சந்திரா மில்ஸ் பிஎல்ஸியின் (கம்பனி) அதிவிசேட பொதுக் கூட்டம் (EGM) 2021 செப்டெம்பர் 10 ஆம் திகதி, பிற்பகல் 3.30 மணிக்கு, நிகர்நிலைத் தளத்தில் நடைபெறவுள்ளது.

பொதுக் கூட்டம் தொடர்பான விவரங்கள், நிகழ்ச்சி நிரல் அத்துடன், பதிலாளுக்கானதும் மற்றும் பதிவு செய்வதற்கானதுமான படிவத்தை, (https://www.cse.lk/pages/company-profile/company-profile.component.html?symbol=HARI.N0000) என்ற கொழும்பு பங்குச் சந்தையின் இணையத் தளத்தில் அல்லது கம்பனி இணையத் தளத்தில் (www.harischandramilla.com) பெற்றுக்கொள்ள முடியும்.

பங்குபற்ற விரும்பும் பங்குதாரர்கள், தயவுசெய்து தாமதமின்றி, மேற்குறித்த இணையத்தளங்களில் கிடைக்கப்பெற்ற விண்ணப்பப்படிவத்தை பூர்த்திசெய்து coporateservices@corporateservices.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு கூட்டம் ஆரம்பமாகும் குறித்த நேரத்துக்கு 48 மணித்தியாலங்களுக்கு முன்னராக அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

ஹரிச்சந்திரா மில்ஸ் பிஎல்ஸி இன்
இயக்குநர் சபையின் அறிவுறுத்தலின் பிரகாரம்
கோர்ப்பிரேட் சேர்விஸஸ் (பிரைவேட்) லிமிட்டட்
செயலாளர்கள் / பதிவாளர்கள்
2021 ஒகஸ்ட் 25ஆம் திகதியின் படி

# 27 நாள்களில் 10 பொலிஸார் கொரோனாவால் மரணம்

இவர்களின் பிரதான பொலிஸ் பரிசோதகர் ஒருவர், பொலிஸ் பரிசோதகர் ஒருவர், 6 துணை பரிசோதகர்கள், 13 பொலிஸ் சார்ஜென்டுகள் மற்றும் 6 பொலிஸ் அதிகாரிகள் உள்ளடங்குகின்றனர்.

இவர்களில் பெரும்பாலானோருக்கு கொரோனா தொற்றுடன் நிமோனியா காய்ச்சலும் தொற்றியிருந்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. .

ஒகஸ்ட் 01 முதல் நேற்று வரை (27) கிதுல்கல, கலஹா, தெல்ட்டகொட, காலி, முகத்துவாரம், உடுகம, அம்பன்பொல, தேசிய பொலிஸ் அறிவியல் பீடம், மட்டக்களப்பு மற்றும் கேகாலை ஆகிய பொலிஸ் நிலையங்களைச் சேர்ந்த பொலிஸாரே உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை, கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளான நிலையில், கொழும்பிலுள்ள தனியார் வைத்தியசாலையொன்றில் சிகிச்சை பெற்றுவந்த முன்னாள் பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண, பூரணமாக குணமடைந்த நிலையில் வீடு திரும்பியுள்ளார்.

# காபூல் விமான நிலையத்தில் இரட்டை குண்டுவெடிப்பு

இந்த இரட்டை குண்டு வெடிப்புத் தாக்குதலுக்கு ஐ.எஸ் பயங்கரவாத அமைப்பு பொறுப்பேற்றுள்ளது.

ஆப்கானிஸ்தானை தலிபான்கள் முழுமையாக கைப்பற்றியுள்ள நிலையில் அந்நாட்டில் இருந்து எதிர்வரும் 31ஆம் திகதிக்குள் அமெரிக்கப் படைகள் முழுவதும் வெளியேற உள்ளன.

தலிபான்கள் ஆட்சியைக் கைப்பற்றியதால் ஆப்கானிஸ்தானில் சிக்கியுள்ள தங்கள் நாட்டு மக்கள், தங்களுக்கு உதவிய ஆப்கானிஸ்தான் நாட்டவர், அந்நாட்டின் பொதுமக்கள் எனப் பலரையும் அமெரிக்கா, ஜெர்மனி, பிரான்ஸ் மற்றும் இந்தியா உள்ளிட்ட பல நாடுகள் விமானம் மூலம் மீட்டு வருகின்றன.

இந்த மீட்புப் பணிகள் காபூல் விமான நிலையத்தில் நடைபெறுகிறது. இதற்காக, காபூல் விமான நிலையத்தை அமெரிக்கப் படைகள் தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டு வந்துள்ளன.

ஒகஸ்ட் 31ஆம் திகதிக்கு பின்னர் காபூலில் மீட்புப் பணிகளும் நிறுத்தப்பட்டு, படைகள் முழுவதும் திரும்பப்பெறப்படும் என அமெரிக்க ஜனாதிபதி ஏற்கெனவே அறிவித்திருந்தார்.

இதனால், ஆயிரக்கணக்கான ஆப்கானியர்கள் காபூல் விமான நிலையத்துக்கு வெளியே குவிந்தவண்ணம் உள்ளனர். இந்நிலையிலேயே, இந்த இரட்டை குண்டுவெடிப்பு இடம்பெற்றுள்ளது.

காபூல் குண்டுவெடிப்புத் தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்துள்ள அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், இந்தத் தாக்குதலில் ஈடுபட்டவர்களை நாம் வேட்டையாடுவோம் எனக் குறிப்பிட்டுள்ளார்.

பாதுகாக்கப்பட வேண்டிய

# பண்டாரவன்னியன் சுவடுகள்

விஜயரத்தினம்
சரவணன்

முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மூன்று மாவட்டங்களும் இணைந்த பகுதி வன்னி நிலம் எனப்படுகின்றது. இந்த வன்னி நிலத்தின் எல்லைகளாக வடக்கே கிளிநொச்சியும் தெற்கே மதவாச்சியும் கிழக்கு மேற்கு எல்லைகளாக கடலும் காணப்படுகின்றன.

இந்த வன்னி நிலத்தை இறுதியாக ஆட்சிசெய்த தமிழ் மன்னனாக பண்டாரவன்னியன் காணப்படுகின்றார். இவ்வாறு பண்டாரவன்னியன் வன்னியை ஆட்சிசெய்த காலத்தில், மேலைத்தேய அந்நியப் படைகளான போர்த்துக்கீசர், ஒல்லாந்தர், பிரித்தானியர் என அனைவரும் வன்னி மண்மீது படையெடுத்ததாக வரலாறுகள் கூறுகின்றன.

இவ்வாறு படையெடுத்துவந்த அந்நியப்படைகளுக்கு பண்டாரவன்னியன் சிம்மசொப்பனமாகத் திகழ்ந்தார். குறிப்பாக, போர்த்துக்கீசப் படைகள் 1621ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியபோதும், அவர்களால் பண்டாரவன்னியனின் ஆட்சிக்குட்பட்டிருந்த வன்னி மண்ணினை நெருங்க முடியவில்லை என வரலாற்று ஏடுகள் குறிப்பிடுகின்றன.

இவ்வாறு வன்னியைக் கைப்பற்ற முடியாமலேயே போத்துக்கீசரின் ஆட்சி இலங்கையில் முடிவிற்குவர, அதன் பின்னர் வந்த ஒல்லாந்தப் படைகளும் வன்னிமீது படைதொடுத்தன. இவ்வாறு வன்னிமீது படைதொடுத்த ஒல்லாந்தப் படைகளாலும் வன்னி முழுவதையும் கைப்பற்ற முடியவில்லை.

இவ்வாறு படையெடுத்து வந்த ஒல்லாந்தர் படைகள் 1715ஆம் ஆண்டு முல்லைத்தீவில் கோட்டை ஒன்றை நிறுவியதாக வரலாற்றுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இப்படியாக முழுமையாக வன்னியை தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரமுடியாமலே ஒல்லாந்தரும் இலங்கையை விட்டு வெளியேற, அதன் பின்னர் வந்த பிரித்தானியப் படைகளும் வன்னிமீது தமது ஆக்கிரமிப்பு நடவடிக்கையைத் தொடர்ந்தன.

பிரித்தானியப் படைகள் வன்னியின் பெருமளவான இடங்களைக் கைப்பற்றியபோதும், எதற்கும் தளர்ந்துவிடாத பண்டாரவன்னியன், இறுதியாக முல்லைத்தீவிலிருந்து வற்றாப்பளை அம்மன் கோவில்வரையுள்ள இரண்டாயிரம் சதுர மைல் நிலப்பரப்பில் தனது ஆட்சியை தொடர்ந்து முன்னெடுத்து வந்ததாகவும் வரலாற்று ஆவணங்கள் கூறுகின்றன.

அத்தோடு, ஒல்லாந்தரால் முல்லைத்தீவில் அமைக்கப்பட்டிருந்த கோட்டையை பிரித்தானியர்கள் 1795ஆம் ஆண்டு மீளுருவாக்கம் செய்து, அதனை படைத் தலைமையகமாகப் பயன்படுத்தி வந்தநிலையில், அந்தக் கோட்டையை 1803ஆம் ஆண்டு, ஒகஸ்ட் மாதம் 25ஆம் திகதி பண்டாரவன்னியன் தகர்த்ததுடன், அந்தக் கோட்டையிலிருந்த பிரித்தானியப் படைகளின் பீரங்கிகளையும் கைப்பற்றியதாகவும் வரலாறுகள் கூறுகின்றன.

அதன் பின்னர் குறுநில மன்னனான காக்கைவன்னியன், முன்விரோதம் காரணமாக





பண்டாரவன்னியன் தகர்த்த வெள்ளையர்களது கோட்டையின் ஒருபகுதி

பிரித்தானியருக்கு பண்டாரவன்னியனைக் காட்டிக்கொடுத்ததாகவும், அதன்படி 1803 அக்டோபர் மாதம் 31ஆம் திகதி பிரித்தானியத் தளபதி ரிபேக் என்பவரால் பண்டாரவன்னியன் கற்சிலைமடு என்ற இடத்தில் வீழ்த்தப்பட்டதாக வரலாறுகள் கூறுகின்றன.

பிரித்தானியர், பண்டாரவன்னியனை வீழ்த்தினாலும் அவனின் வீரத்தினை கௌரவப்படுத்தி, பண்டார வன்னியன் வீழ்த்தப்பட்ட இடத்தில் நடுகல் ஒன்றை பிரித்தானியத் தளபதி ரிபேக் அமைத்துள்ளார். அவ்வாறு அமைக்கப்பட்ட நடுகல் தற்போதும் கற்சிலைமடுப் பகுதியில் காணப்படுகின்றது. வீழ்த்தப்பட்ட எதிரிகளாலேயே கௌரவப்படுத்தப்படும் பண்டாரவன்னியன் ஓர் உன்னத வீரனாவான். எனவே, அந்நியர்களின் ஆக்கிரமிப்புக்கு எதிராகவும், தமிழ் மண்ணையும், தமிழ் மக்களையும் காப்பற்றுவதற்காகவும் போராடிய உன்னதமான அந்த வீரனை நினைவில் கொள்ளவேண்டியதும் அவனை வணங்க வேண்டியதும் தமிழர்களது தவிர்க்க முடியாத கடமையாகக் காணப்படுகின்றது.

அந்தவகையில், பண்டாரவன்னியன் முல்லைத்தீவுக் கோட்டையை வெற்றிகொண்ட நாளான ஒகஸ்ட் மாதம் 25ஆம் திகதியில் வருடந்தோறும் தமிழ் மக்கள் பண்டாரவன்னியனை நினைவுகூருகின்றனர்.

குறிப்பாக, முல்லைத்தீவில் பிரித்தானியர்களது கோட்டையிருந்த மாவட்டசெயலகத்துக்கு முன்பாக பண்டாரவன்னியனுக்குச் சிலை அமைக்கப்பட்டுள்ளது. வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் தலைமையில், அங்கு ஒகஸ்ட் மாதம் 25ஆம் திகதியில் வருடந்தோறும் பண்டாரவன்னியன் சிலைக்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்படுவதுடன், பண்டாரவன்னியன் ஒரே வாள்வீச்சில் 60வெள்ளையர்களை வீழ்த்தியதாகக் கூறப்படுகின்ற முள்ளியவளை, கயட்டையடி, கற்பூரப் புல்வெளியிலும் அன்றைய தினத்தில் பண்டாரவன்னியனுக்கு அஞ்சலி செலுத்தப்படும்.

அத்தோடு, பண்டாரவன்னியன் பிரித்தானியரால் வீழ்த்தப்பட்ட இடத்திலும் பண்டாரவன்னியனுக்குச் சிலை அமைக்கப்பட்டுள்ளது. அங்கும் குறித்த தினத்தில் வருடந்தோறும் அஞ்சலிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

அந்தவகையில், இவ்வருடமும் ஒகஸ்ட் மாதம் 25ஆம் திகதியும் பண்டாரவன்னியனின் 218ஆவது வெற்றிநாள் நினைவில் கொள்ளப்பட்டது. இவ்வருடம் கொவிட்-19 பெருந்தொற்றுக் காரணமாக நாடு முடக்கப்பட்டுள்ளதால், வழமைபோன்று இல்லாது சுகாதார வழிமுறைகள் பின்பற்றப்பட்டு, மட்டுப்படுத்தப்பட்ட அளவில் துரைராசா ரவிகரனின் மக்கள் தொடர்பகத்தில் பண்டாரவன்னியனின் 218ஆவது வெற்றி நாள் நினைவுகூரப்பட்டது.

பண்டாரவன்னியனின் திருவுருவப்படத்துக்கு




சுடரேற்றி, மலர்தூவி அஞ்சலிசெலுத்தப்பட்டது. இந்த அஞ்சலி நிகழ்வில், துரைராசா ரவிகரன் மற்றும், கரைதுறைப்பற்று பிரதேசசபை உறுப்பினர் சின்னராசா லோகேஸ்வரன் ஆகியோர் பங்குகொண்டனர். துரைராசா ரவிகரன் அங்கு கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது: "தமிழர்களின் வீரம் செறிந்த வெற்றிநாள் இன்றாகும். எங்களுடைய இடங்களை ஆக்கிரமிக்க முற்பட்ட அந்நியப் படைகளை மாவீரன் பண்டாரவன்னியன் துரத்தியடித்த வெற்றி நாள் இன்றாகும்.

குறிப்பாக, தமிழர்களின் நிலத்தில் அமைக்கப்பட்டிருந்த பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் முல்லைத்தீவுக் கோட்டை மீது, தமிழ் மன்னன் பண்டாரவன்னியன் 1803ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம், 25ஆம் திகதி போர்தொடுத்து முல்லைத்தீவு கோட்டையைக் கைப்பற்றிய வரலாற்று வெற்றிநாள் இன்றாகும். இவ்வாறானதொரு வரலாற்று வீரன் பண்டாரவன்னியனின் வெற்றிநாளை நினைவில் கொள்ளவேண்டும்.

பண்டாரவன்னியனின் வரலாற்றுடன் தொடர்புடைய அடையாளச் சின்னங்களைப் பாதுகாப்பதற்கோ அவற்றை அடையாளப்படுத்துவதற்கோ இலங்கை அரசும், உரிய அரச திணைக்களங்களும் நடவடிக்கை எடுப்பதில்லை. தமிழர்களின் பூர்வீக வரலாற்று இடங்களில் பௌத்தமதத் திணிப்பினை மேற்கொள்வதுடன், தமிழர்களின் பூர்வீக நிலங்களைஆக்கிரமிப்புச் செய்யும் செயற்பாடுகளில் அதிகம் ஆர்வத்துடன் செயற்படுகின்றன.

ஆனால், தமிழர்களின் வரலாற்றில் உன்னத வீரனாகக் கருதப்படும் பண்டாரவன்னியனின் வரலாற்றுடன் தொடர்புடை இடங்களை பாதுகாப்பதற்கும், அவற்றை அடையாளப்படுத்துவதற்கும் தொல்லியல் திணைக்களம் நடவடிக்கை எடுக்கவில்லை" என்றார்.

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்துக்குள் காணப்படும், பண்டாரவன்னியன் தகர்த்த வெள்ளையர்களது கோட்டையின் ஒருபகுதி சிதைவடைந்த நிலையில் இன்றும் காணப்படுகின்றது. அந்தச் சிதைவடைந்த கட்டடம் முற்றாக அழிவடைந்துபோகும் நிலையை எட்டியுள்ளது. எனவே, அந்த இடம் பாதுகாக்கப்பட வேண்டும்; அந்த சிதைவடைந்த கட்டடம் என்ன என்பதை விளக்கும் வகையிலான பெயர்பலகை அங்கு நிறுவப்படவேண்டும். அத்துடன், கற்சிலைமடு பகுதியிலுள்ள பிரித்தானியரால் நிறுவப்பட்ட நடுகல் உள்ளிட்ட பண்டாரவன்னியனின் வரலாற்றுடன் தொடர்புடைய விடயங்கள் அனைத்தும் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதும் தமிழ் மக்களின் முக்கிய கோரிக்கையாகும்.




பண்டாரவன்னியனின் வீரத்தைக் கௌரவப்படுத்தி, பிரித்தானியத் தளபதி அமைத்த நடுகல்



# இரவில் நடமாடும் சவப்பெட்டிகள்



ப.பிறின்சியா டிக்சி
p.p.dixci@gmail.com





"ஆடி அடங்கும் வாழ்க்கையடா, ஆறடி நிலமே சொந்தமடா" என்ற பாடல் வரிகள் பொய்மையாக்கப்படும் காலமிது. ஆறடி நிலமல்ல, ஒரு சவப்பெட்டிகூட சொந்தமில்லாத நிலைமைக்கு சென்றுகொண்டிருக்கிறது.

ஒருவர் இறந்துவிட்டால், அவரது கடந்தகால செயல்களைப் புகழ்பாடி, பாடைகளை அலங்கரித்து, தத்தமது மதங்களின் பிரகாரம் இறுதிப் பிரார்த்தனைகளைச் செய்து, ஊரவர்களே ஊர்வலம் சென்று, பூக்கள் தூவி, அடக்கம் செய்த காலம் மலையேறிவிட்டது.

யாரோ தெரியாத நால்வர், எவ்விதமான முணுமுணுப்புகளும் இன்றி, தகனசாலைக்குள் சவப்பெட்டிகளை திணித்துகொண்டிருக்கும் நிலைமையே இலங்கையிலும் ஏற்பட்டுள்ளது. பல தகனசாலைகள், 24 மணிநேரமும் இயங்கிக்கொண்டிருக்கின்றன.

அதுமட்டுமன்றி, சொந்தங்களைக் கூட அநாதையாக விட்டுச்செல்லும் நிலைமை ஏற்பட்டுள்ளது. கொரோனா மரணங்கள் எத்தனைதான் நிகழ்ந்தாலும் ஐந்து வயதுச் சிறுமியை அநாதையாக்கிவிட்டு, அவளது பெற்றோரை, திருமண நாளன்றே கொரோனா கொன்றொழித்த சம்பவம், ஒவ்வொருவரின் மனங்களையும் உருக்கிக்கொண்டே இருக்கும்.

கிரிபத்கொடையைச் சேர்ந்த 36 வயதுடைய தனஞ்செய அனுருத்த என்ற ஆங்கில ஆசிரியரும் அவரது 27 வயதுடைய மனைவியும் இவ்வாறு உயிரிழந்துள்ளனர். அதுமட்டுமன்றி, பிறந்த சிசு முதல், இரண்டரை வயது, 12 வயதுச் சிறுமிகளென, வயது வித்தியாசங்கள் இன்றி, கொரோனாவின் மரணங்கள் எகிறிகொண்டே போகின்றன.

இப்படிச் சென்று கொண்டிருந்தால், நம் கண் முன்னே நிகழும் மரணங்களை எண்ணுவதா அல்லது நமக்கான மரணத்துக்கு நாள்களை எண்ணுவதா என்று தெரியவில்லை. அந்தளவுக்கு, நாளுக்கு நாள் வெளியாகும் கொவிட் மரணங்கள் அதிர்ச்சியை ஏற்படுத்துகின்றன.

தற்காலத்தில் பிணவறைகள், மின் தகனம், சுடுகாடு, இடுகாடு போன்ற சொற்பதங்களுக்கு இலங்கை வாழ் மக்கள் பழகிவிட்டனர். ஒரு சிலர் இரண்டுக்கும் மேற்பட்ட மரணங்களைத் தமது கண்ணெதிரே கண்டுவிட்டனர். குடும்ப உறுப்பினர்கள், நண்பர்கள் எனப் பலரை அவர்கள் இழந்து தவிக்கின்றனர். இந்நிலையிலேயே, ஊடகவியலாளர்கள், வைத்தியர்கள், பொதுமக்கள் எனப் பலரும் தமது கொவிட் அனுபவங்களை சமூக வலைத்தளங்கள் வாயிலாகத் தெரியப்படுத்தி வருகின்றனர்.

சிலர், போலியான புகைப்படங்களுடன் கதைகளைக் கட்டி மக்களை பீதியடையச் செய்துவிடுகின்றனர். அதில், அவர்களுக்கு ஓர் இன்பம்.



பயப்பீதியை கிளப்பும் அவ்வாறானவர்களுக்கு சரியான தண்டனையை பெற்றுக்கொடுக்கவேண்டும். அத்தண்டனையே ஏனையோருக்கு ஒரு பாடமாக அமையவேண்டும்.

உருக்கமான பதிவுகள் உண்மையில் நெகிழச் செய்கின்றன. அனைத்தும் மரண பீதியை ஏற்படுத்துகின்றன. இலங்கை, இடுகாடாக மாறுவது வெகு தொலைவில் இல்லை என எச்சரித்து நிற்கின்றன.

அவற்றுக்கு ஏற்றால் போலவே, நாட்டில் இடுகாடுகளுக்கான இடப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதுடன், இருக்கும் இடுகாடுகளை விஸ்தீரணப்படுத்தும் செயற்பாடுகளும் புதிய இடுகாடுகளை ஏற்படுத்துவதற்கான இடங்களும் அடையாளப்படுத்தப்பட்டு வருகின்றன. இவை போதாதென, சவப்பெட்டிகளைப் பெறுவதற்கான அல்லல்களுக்கும் சிலர் உள்ளாகி வருகின்றனர்.

சிலர், இலவசமாக சவப்பெட்டிகளை செய்து விநியோகிக்கின்றனர். எரியத்தானே போகிறது. என்றெண்ணும் பலரும் காட்போட்களில் பெட்டிகளைத் தயாரிக்கத் தொடங்கிவிட்டனர்.

இறுதி மரியாதை என்பதற்கு அப்பால், எவ்வளவு விரைவாக பிணங்களை அகற்றவேண்டுமோ, அவ்வளவு விரைவாக பிணங்கள் அகற்றப்படுகின்றன.

உங்கள் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் கொரோனாத் தொற்றால் மரணித்தால் 20,000 ரூபாய் முதல் 30,000 ரூபாய்க்கு பிரேதப் பெட்டிகளை உங்களுக்காகக் கொள்வனவு செய்யும் நிலையில் அரசாங்கம் இல்லை என பேஸ்புக்கில் பெண்ணொருவர் அண்மையில் பதிவிட்டிருந்தார்.

அதற்குச் சாட்சியாக அப்பதிவில் இரண்டு புகைப்படங்களையும் அவர் இணைத்திருந்தார். அதாவது, வைத்தியசாலைக்கு முன்பாக, மலிவான சவப்பெட்டிகளை ஏற்றியவாறு இரு ஓட்டோக்கள் காத்திருக்கின்றன.

கொழும்பு தேசிய வைத்தியசாலையை அண்மித்த பகுதியில் பணிபுரியும் பெண்ணொருவரே, தனது பேஸ்புக்கில் அவ்வாறு பதிவிட்டிருந்தார்.

கொழும்பு வோர்ட் பிளேசில் பிரேத அறை அமைந்துள்ள பகுதி மாலை 6 மணி முதல் அதிகாலை 6 மணிவரை பிரேத ஊர்வலம் நடக்கும் பகுதியாகக் காணப்படுகின்றது என அப்பதிவில் அவர் குறிப்பிட்டுள்ளார். மேலும் அப்பதிவு இவ்வாறு நீண்டு செல்கின்றது;

"மலிவான விலையில் கிடைக்கும் பிரேதப் பெட்டிகளை ஓட்டோக்களில் கொண்டுவந்தனர். இவ்வாறான பிரேதப் பெட்டிகளை அரசாங்கம் வழங்குவதில்லை. பிரேதப் பெட்டிகள் விற்கும் கடைகளில் பிரேதப் பெட்டிகள் இல்லை அறிய முடிந்தது. இதன் அர்த்தம் என்னவென்றால், எதிர்காலத்தில் மிகவும் மலிவான பிரேதப் பெட்டியில் இறுதி ஊர்வலத்தை முன்னெடுப்பதற்கான வாய்ப்புகள் கூட உங்களுக்கு இல்லாமல் போகலாம். கோடி ரூபாய்க்கு பிரேதப் பெட்டியைக் கொள்வனவு செய்வதற்கான வசதியிருந்தால் கூட, எங்களால் எங்கள் நெருங்கிய நண்பருக்கு கௌவரமான பிரியாவிடையை வழங்க முடியாது.

இன்று நீங்கள் உயிருடன் இருக்கக்கூடும்; நாளை நீங்கள் அவருடன் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையில் இணையக்கூடும். கொரோனாவுடனான இந்த மோதல் முடிவுக்கு வரும் நேரம் எங்களைச் சுற்றியுள்ள பலர், சொல்லாமல் போயிருப்பார்கள்' என மிகவும் உருக்கமாகப் பதிவிட்டுள்ளார்.

நாடளாவிய ரீதியில் கொரோனா வைத்தியசாலைகள் நிரம்பி வழிகின்றன. இதனால், கொரோனா தொற்றுக்குள்ளான பலர் எவ்வித மருத்துவக் பராமரிப்புகளும் இன்றி வீடுகளுக்குள்ளேயே மரணிக்கின்றனர்.

"பாணந்துறை வைத்தியசாலையில் கொரோனா தொற்றால் மரணிப்போரின் சடலங்களை அப்புறுப்படுத்த முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. பிணவறைகள் நிரம்பிவழிகின்றன. ஆகையால், சலங்களை ஓரிடத்தில் வைத்து டயர்களைப் போட்டு எரியூட்டுவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது" என பாணந்துறை நகர சபையின் தவிசாளர் நந்தன குணத்திலக்க தெரிவித்தார்.

இவ்வாறான நிலைமை நாட்டின் பல வைத்தியசாலைகளில் ஏற்பட்டுள்ளன. கொவிட் சடலங்களை வைப்பதற்கான இடமின்மையால், குளிரூட்டப்பட்ட கன்டெய்னர் பெட்டிகளுக்குள்ளும் சடலங்கள் முடக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

தெஹிவளை - கல்கிஸ்ஸ நகர சபையால் இலங்கைக்கு அறிமுகப்படுத்தப்பட்ட 'கார்ட்போட்' சவப்பெட்டி தயாரிப்புகளும் முன்னெடுக்கப்படுகின்றன. சவப்பெட்டிகள் உட்பட சடலம் வைக்கப்படும் பைகளும், தனவந்தர்களால் அன்பளிப்புச் செய்யப்பட்டு வருகின்றன.

அவ்வாறே, மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை உட்பட மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வைத்தியசாலைகளில் கொரோனாத் தொற்றால் மரணிப்பவர்களை அடக்கம் செய்வதற்காக பெட்டிகள் மற்றும் பைகள் காத்தான்குடியிலிருந்து இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன.

நிலைமை இவ்வாறு இருக்கையில், நாட்டை முழுமையாக முடக்கி, கொரோனா தொற்றை ஒழிக்க, தனிமைப்படுத்தல் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஆனால், 'ஒழுக்கம்' எனும் விடயத்தை ஒரு மனிதன், சுயமாக யோசித்து நடந்துகொள்ள வேண்டும். கட்டுப்பாடு விதித்தால்தான் கட்டுப்படுவேன் என்று நடந்தால், அது ஒழுக்கம் ஆகாது. எனவே, சிறந்த சுகாதார ஒழுக்கத்தைக் கடைப்பிடித்து, தனி மனித சுகாதாரத்தைப் பலப்படுத்தி, தனக்கும், தன் சுற்றத்தாருக்கும் துன்பம் தராமல் நடப்பது இன்றைய காலகட்டத்தில் இன்றியமையாததாகும்.

# தொடரும் மர்மம்

## மல்லாவி, மணலாறில் அதிகரிக்கும் சிறுநீரக நோயாளிகள்



சுப்பிரமணியம் பாஸ்கரன்







முல்லைத்தீவு மாவட்டத்தில், கடந்த 10 ஆண்டுகளாக சிறுநீரக நோயின் தாக்கத்துக்கு உள்ளாகுவோரின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்து வருகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மல்லாவி, மணலாறு ஆகிய பிரதேசங்களிலேயே சிறுநீரக நோயாளிகள் அதிகளவில் அடையாளம் காணப்பட்டுள்ளனர். முன்னர், இந்தப் பிரதேசங்களில் இவ்வாறான நோயின் பாதிப்பு இருந்திருக்கவில்லை. ஆனால், தற்போது சிறுநீரக நோயாளிகள் அதிகரித்து வருவதை வெளிப்படையாக அவதானிக்க முடிகின்றது.

மல்லாவி, மணலாறு ஆகிய இரண்டு சுகாதார வைத்தியஅதிகாரி பிரிவுகளிலும் 2015ஆம் ஆண்டு முதல் 2018ஆம் ஆண்டு வரையான புள்ளிவிவரங்களின் அடிப்படையில், சிறுநீரக நோயின் தாக்கம் அதிகரித்திருக்கின்றது.

மல்லாவி பிரதேசத்தில், 2015ஆம் ஆண்டு 143 பேரும், 2016ஆம் ஆண்டில் 197 பேரும் 2017ஆம் ஆண்டில் 224 பேரும் 2018ஆம் ஆண்டில் 362 பேரும் சிறுநீரக நோயாளிகளாக அடையாளம் காணப்பட்டிருந்தனர்.

வெலிஓயா பிரதேசத்தில், 2015ஆம் ஆண்டில் 251 பேரும் 2016ஆம் ஆண்டில் 353 பேரும் 2017ஆம் ஆண்டில் 425 பேரும் 2018ஆம் ஆண்டில் 411 பேரும் இவ்வாறான நோய்த் தாக்கத்துக்கு உள்ளாகியுள்ளனர்.

இதுவரை, இந்த இரண்டு பிரதேசங்களிலும் அசாதாரணமாக அதிகரித்துவரும் சிறுநீரக நோய்க்கான காரணம் கண்டறியப்படாவிட்டாலும், அது தொடர்பான ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த நோய்க்கான பிரதானமான காரணம், குடிநீராக இருக்கலாம் என்று சொல்லப்பட்டாலும் அது, இன்னமும் விஞ்ஞான ரீதியாக நிரூபிக்கப்படவில்லை என்று சுகாதாரத்துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தண்ணீரில் அதிகரித்திருக்கும் நுண்ணங்கிகளும் விவசாயத்துக்குப் பயன்படுத்தப்படும் இராசாயனங்களின் அதிகரிப்பும் உணவுப் பழக்க வழக்கங்களில் ஏற்பட்ட மாற்றங்களும், இவ்வாறு சிறுநீரக நோய் அதிகரித்து வருவதற்குக் காரணமாக அமைகின்றது எனச் சந்தேகம் தெரிவிக்கப்படுகின்றது.

> **இராசாயனப் பயன்பாட்டைக் குறைத்தல், நஞ்சற்ற உணவு உற்பத்திகளை மேற்கொள்ளுதல், நிலக்கீழ் நீரைப் பாதுகாத்து சுத்தமான குடிநீரைப் பெறுவதற்கு வழிசெய்தல், பாரம்பரிய உணவுப் பழக்க வழக்கங்களை கையாளுதல் ஊக்குவித்தல் என்பனவே, இதற்குச் சிறந்த தீர்வாக அமையும்**

இவ்வாறு வயது வேறுபாடுகளின்றி சிறுநீரக நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்ற போதும், இன்றுவரை மக்கள் மத்தியில் விழிப்புணர்வு இல்லாத நிலை காணப்படுகின்றது. ஆனாலும், பெருமளவான இப்பிரதேச மக்கள், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர்ப் பாவனையில் அதிக கவனம் செலுத்துகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, சிறுநீரக நோய்ப் பாதிப்புக்கு உள்ளாவதற்கு முன்னர், உரிய மருத்துவ ஆலோசனைகள் இல்லாமல், தாமாக மருந்தகங்களில் வாங்கிப் பயன்படுத்திய மருந்துகளின் பின்விளைவும் இவ்வாறாக சிறுநீரக நோய்க்கு ஒரு காரணியாக அமையும் என்றும் மருத்துவர்கள் குறிப்பிடுகின்றனர்.

எது எவ்வாறு இருப்பினும், மக்கள் மத்தியில் சிறுநீரக நோய் தொடர்பான விழிப்புணர்வு மிக மிக அவசியமாகும். இவ்வாறான விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டிய தேவையும் பொறுப்பும், எல்லோரிடத்திலும் உள்ளது.

இன்று நாட்டை அச்சுறுத்தி வருகின்ற கொவிட் -19 பெருந்தொற்கைக் கூட, கட்டுப்படுத்துவதற்கு இவ்வாறான விழிப்புணர்வுகளும் பொறுப்புகளும் மிகமிக அவசியமாகும்.

முல்லைத்தீவு விவசாய மாவட்டமாக காணப்படுவதுடன், 80 சதவீதமான மக்கள் விவசாயத்தையே தமது முழுநேரத்தொழிலாக முன்னெடுத்து வருகின்றனர். இந்த விவசாயத்தின் மூலம், அதிக இலாபத்தை ஈட்டவேண்டும் என்ற எண்ணம், பிரதான இலக்காகக் காணப்படுகின்றதே தவிர, நஞ்சற்ற உணவை உற்பத்தி செய்ய வேண்டும், சுகதேகிகளாக வாழ வேண்டும் என்ற எண்ணம் பெரும்பாலானவர்களிடம் இல்லை. இத்தகைய போக்கு, எதிர்காலத்தில் வெவ்வேறு நோய்களின் தாக்கங்களுக்கும் வழிவகுக்கலாம்.

ஆதிகாலத்தில் வாழ்ந்த மக்கள், சேதனப் பசளைகளைப் பயன்படுத்தி விவசாயத்தை முன்னெடுத்த அதேநேரம், போதுமான அளவு உரிய விளைச்சலையும் பெற்று, நல்ல தேக ஆரோக்கத்தையும் கொண்டிருந்தார்கள். அவர்களில் அநேகர், யானையை அடக்கும் பலம் கொண்டவர்களாக வாழ்ந்திருக்கின்றனர் என சொல்லப்படுகின்றது. இதற்கு நிறைய ஆதாரங்கள் உள்ளன என்பதை, எங்கள் மூதாதையர்கள் மூலமும் அறிந்திருக்கின்றோம்.

இப்போது, விவசாயத்தில் நவீன வளர்ச்சி கண்டாலும் இவ்வாறான தொற்றா நோய்த் தாக்கங்கள், போசாக்கு குறைபாடுகள், கண்பார்வை குறைபாடுகள் எனப் பல்வேறுபட்ட நோய்கள் ஏற்படுகின்றன.

இதற்கு முழுக்க முழுக்க மனிதனின் செயற்பாடுகளே காரணமாக அமைகின்றன. தற்போது சேதனப் பசளைகளினுடைய பயன்பாட்டை அதிகரித்தல், இரசாயன பூச்சி நாசினிகளை அளவுக்கதிகமாகப் பாவிப்பதைக் குறைத்தல் போன்றவற்றில் விழிப்புணர்வுகள் ஏற்படுத்தப்பட்டு வரும் நிலையில், அதனை எவரும் ஏற்றுக் கொள்ளத்தயாராக இல்லை என்பதும் கவலைக்குரிய விடமாகக் காணப்படுகின்றது. இத்தகைய இரசாயனப் பயன்பாடு, எதிர்காலத்தில் நிலக்கீழ் நீரை மேலும் மாசுபடுத்தும் என்பது நிதர்சனமாகும்.

முல்லைத்தீவு மாவட்டத்தில், சிறு நீரக நோயாளர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக 2015ஆம் ஆண்டு, மல்லாவி, மணலாறு ஆகிய பிரதேசங்களில் இரண்டு சிறுநீரக வைத்தியசாலைகள் அமைக்கப்பட்டன. ஆனால், இன்றுவரை அதற்கான போதிய வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை.

சிறுநீரக நோயாளர்களுக்கான இரத்த சுத்திகரிப்புகள், வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலை, செட்டிகுளம் வைத்தியசாலை ஆகியவற்றில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

தற்போதைய கொவிட்-19 பெருந்தொற்றுக் காலத்தில், சிறுநீரக நோயாளர்களுக்கான சிகிச்சைகள் இடர்பாடுகள் இன்றி முன்னெடுக்கப்பட்டு வருவதாக அறியமுடிகின்றது, குறிப்பாக, ஒருசிலருக்கு வாரத்தில் மூன்று நாள்கள் கூட இரத்த சுத்திகரிப்பு முன்னைடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இவர்கள் அதிக போக்குவரத்து செலவுகள் உட்பட, சிரமங்களை எதிர் கொள்ளும் நிலையும் காணப்படுகின்றது. ஆனாலும் இன்றைய சூழலில், அதிகளவில் நோய்த் தொற்று ஏற்படக் கூடியவர்களாக இவர்கள் காணப்படுகின்றனர்.

இந்த நிலையில், மேலும் பல வைத்தியசாலைகளை அமைக்கவேண்டும். இருக்கும் வைத்தியசாலைகளை மேம்படுத்தவேண்டும் என்று அரசியல்வாதிகள் மக்கள் பிரதிநிதிகள் கோரிக்கை விடுகின்றனர். இதற்கான வைத்தியசாலைகளை நிறுவுவதோ மேலும் வைத்திய வசதிகளை அதிகரிப்பதோ எதிர்காலத்தில் இதற்கான தீர்வாக அமையாது.

மாறாக, இராசாயனப் பயன்பாட்டைக் குறைத்தல், நஞ்சற்ற உணவு உற்பத்திகளை மேற்கொள்ளுதல், நிலக்கீழ் நீரைப் பாதுகாத்து சுத்தமான குடிநீரைப் பெறுவதற்கு வழிசெய்தல், பாரம்பரிய உணவுப் பழக்க வழக்கங்களை கையாளுதல் ஊக்குவித்தல் என்பனவே, இதற்குச் சிறந்த தீர்வாக அமையும்.





# ஒற்றைத்தலை வலி

பைஷல் இஸ்மாயில்
faizalrj@gmail.com



உலகத்தில் 80 சதவீதமானவர்கள் தலைவலியை எப்போதாவது அனுபவிக்கின்றனர். ஆபத்தான தலைவலி என்று நோக்கும்போது கபாலத்துக்குள் ஏற்படும் இரத்தக் கசிவுகள் மூளைக் கட்டிகளால் ஏற்படும் தலையிடி, மூளைக் காய்ச்சலால் ஏற்படும் தலைவலி என்பன திடீரென தோன்றுவதோடு நினைவிழத்தலையும் ஏற்படுத்தக்கூடியது.

டெங்கு போன்ற வைரஸ் காய்ச்சல், எலிக் காய்ச்சல் போன்ற பக்ரீறியா தொற்றுகளின் பொதுவான குணங்குறிகளில் ஒன்றாகத் தலையிடி காணப்படுகிறது. நோயாளியின் ஒட்டுமொத்த குணக்குறிகளையும் வைத்துத்தான் இவற்றை அனுமானிக்க முடியும் என்று கூறுகிறார் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் விஷேச பொது வைத்திய நிபுணர் டொக்டர் முத்து முருகமூர்த்தி MBBS, MD, MCCP. ஒற்றைத் தலைவலி தொடர்பாகவும் அது ஏற்படுவதற்கான காரணங்களையும் தவிர்த்துக்கொள்ளும் வழிமுறைகள் தொடர்பாக தமிழ்மிரருக்கு வழங்கிய நேர்காணலில் விவரமாகத் தெரிவித்திருந்தார்.

கே: ஒற்றைத் தலைவலி ஒருபக்கமாக ஏன் ஏற்படுகிறது?

பதில்: ஒற்றைத் தலைவலி, தலையின் ஒரே பக்கம்வரும் என்பதல்ல. இரண்டுபக்கங்களிமோ முன்பக்கமோ பின்பக்கமோ மாறி மாறி ஏற்படலாம். ஆயினும், ஒருமுறை ஏற்படும்போது ஒரு பக்கத்தில் ஏற்படும். சிலருக்கு ஆரம்பத்தில் விட்டு விட்டு ஒற்றைத் தலைவலி ஏற்படும். இதனால் பல மாதங்கள் அல்லது பல வருடங்கள் தொடர்ந்து தலைவலியால் அவதிப்படுவார்கள். இந்த நிலைமையை நாட்பட்ட தொடர் தலைவலி என்று அழைப்போம்.

சாதாரணமாக ஒற்றைத் தலைவலி சரிவர நிருவகிக்கப்படாமல் விடுபடும்போது, ஒற்றைத் தலைவலியுடன், இறுக்கத் தலைவலி சேர்ந்து விடுவதால் இவ்வாறான நிலைமை ஏற்படும். முக்கியமாக இவர்களுக்கு ஒருபக்கத் தலைவலியுடன் முன் நெற்றியில் இறுக்கமும் சேர்ந்து காணப்படும்.

எனினும், சுமார் 3 சதவீதமான நோயாளர்கள் மூளைக் கட்டிகளால் பாதிக்கப்படுவதுண்டு. மிக மெதுவாக வளரக்கூடிய கட்டிகள் முதலில் ஒற்றைத் தலைவலி போன்று தோற்றமளித்து, பின்னர் தொடர்ந்த தலைவலியாக மாற ஏதுவாகின்றன. ஆனால், இவர்களின் தலைவலி ஒரே பக்கத்திலேயே காணப்படும். அதாவது, பக்கம் மாறி மாறி ஏற்படாது. இவ்வாறான தோற்றப்பாட்டுடன் எச்சரிக்கை அறிகுறிகளும் தென்படுமாயின் அவர்களுக்கு MRI ஸ்கேன் பரிசோதனை அவசியப்படுகிறது.

மருந்துகளால் ஏற்படும் தலைவலிகள் வைத்தியத்துறையில் முக்கியமானவை. இருதய வலி நிவாரணியாக பாவிக்கப்படும் GTN, ISMN போன்ற நைற்றேற் வகை மருந்துகள் தலையிடியை ஏற்படுத்தலாம். அடிப்படையில் இந்த மருந்துகள் குருதிக் குழாய்களை விரிவடையச் செய்வதால் இவ்வாறு ஏற்படுகிறது. இதேபோன்று தலைவலி நிவாரண மருந்துகளை நீண்டகாலம் அளவுக்கு அதிகமாக எடுத்து வருவதால் அதன் பக்க விளைவாக தொடர்ச்சியான தலையிடி ஏற்படக்கூடும்.

கே: பார்வைக் குறைபாடுகள் காரணமாக ஒற்றைத் தலைவலி ஏற்படுமா?

பதில்: குறும்பார்வை குறைபாடு உள்ளவர்கள் தூரப் பார்க்கும்போது, கண்ணின் உட்தசைகள் அதிக களைப்படைவதால் கண்களைச் சுற்றியும் தலைவலி ஏற்படுகிறது. இது ஒற்றைத் தலைவலியிலிருந்து வித்தியாசமானது. இவர்கள் கண்பார்வையை பரீட்சித்து, உரிய கண்ணாடி அணியும்போது நிவர்த்தியாகிவிடும்.

கே: பலவிதமான தலையிடிகள் உள்ளபோது, இவற்றை அடையாளம் காண்பது எவ்வாறு?

பதில்: தலையிடி ஏற்படும் பக்கத்தையும் அதன் தன்மையையும் வைத்துத்தான் அது ஒற்றைத் தலைவலியா அல்லது சாதாரண தலைவலியா என்று அடையாளம் கண்டுகொள்ள முடியும். ஒற்றைத் தலைவலி, தலையின் ஒருபக்கமாக ஏற்படும். அத்துடன் வாந்தி, குமட்டல், வயிற்றைத் திரட்டுவது, தலைச்சுற்று என்பன ஏற்படும். இந்த தலைவலி 3 மணித்தியாலங்கள் தொடக்கம் 3 நாள்கள் வரை நீடிக்கலாம். இவ்வாறு ஒற்றைத் தலைவலி ஏற்படுவோரில் மூன்றில் ஒரு பகுதியினருக்கு தலைவலி ஏற்படப்போகிறது என்ற முன் அறிகுறிகள் தோன்றும்.

மேலும்,கண்களில் மின்னல் போன்ற ஒளி விம்பங்கள், நெளி கோடுகள், கறுப்புப் புள்ளிகள் போன்றன தோன்றலாம். கழுத்து தோள்பட்டை பகுதியில் ஊசியால் குத்துவது போன்ற உணர்வு, மண நுகர்ச்சி குறைவடையலாம், சிலருக்கு காதில் இரைச்சல் ஏற்படலாம். இந்த அறிகுறிகள் தலையிடி ஏற்பட 15 நிமிடம் முதல் 1 மணித்தியாலம் முன்னதாக ஆரம்பிக்கலாம்.



டொக்டர் முத்து முருகமூர்த்தி

தூண்டற் காரணிகள் உள்ளபோது மூளை குருதிச் சுற்றோட்ட சிறு நாடிகள் சுருக்கம் ஏற்பட்டு குருதி விநியோகம் குறைகிறது. இதன் பக்க விளைவாக ஏற்படும் இரசாயன தூண்டல்களால் குருதிக் குழாய்களும், கபாலத்தின் (தலையோட்டின்) வெளிப்புறத்தில் காணப்படும் குருதிக் குழாய்களும் விரிவடைகின்றன. இவ்வாறு சடுதியாக விரிவடைவதால் குருதிக் குழாய் சுவர்களில் காணப்படும் நரம்பு முடிவிடங்கள் தூண்டப்பட்டு அது வலியாக உணரப்படுகிறது.

அதிகமான இரைச்சல் அல்லது தாங்க முடியாத சப்தத்தின் அண்மையில் இருக்கும்போதும், அதிக வெளிச்சம், வெப்பமான இடங்களில் அதிகமான நேரத்தை செலவிடும்போதும் ஒற்றைத் தலைவலி தூண்டப்படுகின்றது. குறிப்பாக, பெண்களுக்கு மாதவிடாய் அண்மித்த காலத்தில் அல்லது மாதவிடாயின்போது ஒற்றைத் தலைவலி தூண்டப்படுகிறது. சிலவேளைகளில் மலச்சிக்கல் உள்ளபோதும் ஒற்றைத் தலைவலி ஏற்படலாம்.

கே: கொரோனா வைரஸ் தொற்றாளர்களுக்கு தலையிடியும் இருப்பதாக சொல்லப்படுகின்றதே?

பதில்: கொவிட்- 19 நோயாளர்கள் அரைவாசிக்கும் மேற்பட்டோர் தலையிடியை அனுபவித்து வருகின்றார்கள். குறிப்பாக, வயிற்றுப்போக்கு, மணம், குணம் தெரியாமை போன்ற அறிகுறிகளுடன், மெல்லிதான தலையிடி, விட்டு விட்டு ஏற்படும் தலையிடி, தலையில் இறுக்கம் ஏற்படுவது போன்ற உணர்வு அல்லது கடுமையான குத்து வலியாகவும் காணப்படலாம். இவ்வாறு தலையிடி ஒருவருக்கு ஏற்படுமாயின் அவருக்கு கொரோனா வைரஸ் தாக்கத்துக்குள்ளாகி உள்ளார் என்பது உறுதியாகும். இது பெண்களைவிட ஆண்களுக்கே அதிகமாக ஏற்படுகின்றது.

சுமார், 15 சத வீதமானோர் தலையிடியை மட்டும் அறிகுறியாகக் கொண்டு காணப்படுவர். இந்தத் தலையிடி பொதுவாக, மூன்று முதல் ஐந்து நாள்களுக்கு நீடிக்கும். கொரோனா வைரஸ் தொற்று நோயால் ஏற்படும் தலையிடி சிலவேளை மூளையில் நோய்த்தாக்கம் ஏற்பட்டுள்ளதைக் காட்டலாம். ஆயினும், பொதுவான குணக்குறிகளில் ஒரு பகுதியாகவே தலையிடி ஏற்படுகின்றது. மேலும், தாகம், பசியின் அடையாளமாகவும் தலையிடி ஏற்படுகின்றது.

கே: ஒற்றைத் தலைவலி உள்ளவர்கள் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் எவை?

பதில்: ஒற்றைத் தலைவலி உள்ளவர்கள் தூண்டற் காரணிகளை தவிர்த்துக் கொள்ளுதல், தடுப்பு மருந்துகளை கிரமமான முறையில் எடுத்தல், குறைந்தது 6 மணித்தியாலங்கள் தொடர்ச்சியான நித்திரை, காலை ஆகாரம் மிக அவசியம், (காலை 8 மணிக்கு முன்னதாக எடுத்தல்), தூரப்பயணம் செய்ய வேண்டியவராயின் அதிகாலை 5 மணிக்கே காலை ஆகாரத்தை எடுக்க பழக்கப்படுத்திக் கொள்ளவேண்டும். இதன் மூலம் எமக்கு உற்சாகத்தையும் மாணவர்கள் கல்வி கற்றல் விடயங்களில் சுறுசுறுப்பாக ஈடுபடவும் தேவையான சக்தியை மூளைக்கு வழங்கும்.

இதேபோன்று மதிய உணவு, இராப் போசனத்தையும் சரியான நேரத்தில் எடுத்தல் அவசியமாகிறது. தவிர்க்க முடியாமல் பிந்திப் போகுமானால் பசியை தவிர்த்துக்கொள்ள இடையில் சிற்றுண்டிகளை எடுத்துக் கொள்வது நல்லது. நீண்ட நேரத்துக்கு சக்தியை கொடுக்கக்கூடிய முட்டை போன்ற உணவுகளை சேர்த்துக் கொண்டால் நல்லதாகும்.

திறன்பேசி, கணினி நீண்டநேரப் பாவனை, தொலைக்காட்சி நீண்ட நேரம் பார்த்தல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுதலால் கண்கள் களைப்படைவதோடு மூளையும் களைப்படைவதால் தலைவலி தூண்டப்படும். ஆகவே, 30 நிமிடங்களுக்குமேல் இவ்வாறான செயற்பாடுகளைத் தொடர்ந்து செய்யாமல் இருப்பது நல்லது. தொலைக்காட்சி பார்க்கும்போது மிக அருகில் இருந்து கொண்டு பார்க்கக்கூடாது.

கணினியில் நீண்ட நேரம் வேலை செய்பவர்களாயின் ஒவ்வொரு 20 நிமிடத்துக்கும் 5 நிமிடங்கள் கணினித் திரையிலிருந்து ஓய்வு எடுத்துக்கொள்ள வேண்டும். ஒரு நாளைக்கு இரண்டு தொடக்கம் மூன்று லீற்றர் நீராகாரம் எடுக்க வேண்டும். (நீர் மட்டுமின்றி இளநீர், பழச்சாறு, கஞ்சி, சூப்) தூண்டல் காரணியாக செயற்படத்தக்க உணவுகளை முடியுமானவரை தவிர்த்துக் கொள்ளவேண்டும். அவ்வாறு தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களில் உதாரணமாக, நண்பர்களுடன் விருந்து ஒன்று உள்ளதாயின் அன்றைக்கு தடுப்பு மருந்துகளை முன்கூட்டியே எடுப்பதால் பெரும்பாலும் ஒற்றைத் தலைவலி ஏற்படுவதை தவிர்க்கக் கூடியதாக இருக்கும்.

எனது அனுபவத்தில் பெரும்பாலான நோயாளர்கள் சுமார் 3 மாத சிகிச்சைக்கு பின்னர் குறிப்பிட்ட வழிமுறைகளை கடைப்பிடிப்பதால் தலையிடியை தவிர்த்துக் கொள்கின்றனர்.



### நாகசத்தென்ன ஜனவசம தோட்ட மக்களின் அவலம்:

# யாரைத்தான் நம்புவதோ?

றுவன்வெல்ல ரொஷான்

எட்டியாந்தோட்டை பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட நாகஸ்தென்ன தோட்டம் கேகாலை மாவட்டத்தின் இறுதியாகவும் கண்டி மாவட்டத்தின் நாவலப்பிட்டி பிரதேச செயலகத்தின் ஆரம்பமாகவும் இருக்கிறது.

அரசாங்கத்துக்கு சொந்தமான இந்த நாகசத்தென்ன தோட்டம், JDBE ஜனவசம தோட்டத்தில் தோட்ட மக்கள் அடிப்படை வசதியின்றி, உடைந்த வீடுகளில் மழைநீர் ஒழுகும் லயன் குடியிருப்புகளில் வசிக்கும் அவல நிலை தொடர்ந்து வருகின்றது. இவர்கள் வசிக்கும் லயன்கள் உடைந்து விழும் அபாயத்தில் காணப்படுகின்றன. இந்த அபாயத்துக்கு மத்தியிலேயே பல வருடங்களாக, பல சிரமங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றனர்

> தற்போது மழைக்காலம் என்பதால் ஒழுகும் வீடுகளில் மழை நீருக்கு பாத்திரங்களை வைத்துக்கொண்டு, இரவு முழுக்க நித்திரை கொள்ள இடமில்லாமல், பல்வேறு சிரமங்களுக்கு முகம் கொடுக்கிறார்கள்

நாகசத்தென்ன தோட்டம், JDBE ஜனவசம தோட்டத்தில் தோட்ட மக்களுக்கு ஏழு பார்சஸ் காணி வழங்கி, வீட்டுத் திட்டம் செய்து தருவதாக அரசியல் தலைவர்கள் ஏமாற்றியதாக மக்கள் தெரிவித்தார்கள்.

இருந்தபோதிலும் தோட்ட நிர்வாகம், 2019ஆம் ஆண்டு ஒரு குடும்பத்திடம் 3,500 ரூபாய் பணம் பெற்றுக் கொண்டு, அதுக்கு பற்றுச்சீட்டு வழங்கியுள்ளது. தோட்ட மக்களுக்கு வீடுகட்ட நிலம் பெற்றுத்தருவதாக 3,500 ரூபாய் பணம் தோட்ட காணி அளவீடு செய்வதற்கும், மண்சரிவு போன்ற இயற்கை அனர்த்தம் தொடர்பான மண் பரிசோதனை செய்வதற்காக இந்தப் பணம் பெற்றுக் கொள்வதாக நிர்வாகம் அறிவித்திருந்தது. இருந்தபோதிலும் இரண்டு வருடமாக, இதுவரை காத்திருக்கும் மக்களுக்கு எந்த காணி அளவிடும் செய்யவில்லை எனத் தோட்ட மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

தொடர்ந்தும் உடைந்த லயன் குடியிருப்புகளில் ஆபத்தான நிலையில் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். தற்போது மழைக்காலம் என்பதால் ஒழுகும் வீடுகளில் மழை நீருக்கு பாத்திரங்களை வைத்துக்கொண்டு, இரவு முழுக்க நித்திரை கொள்ள இடமில்லாமல், பல்வேறு சிரமங்களுக்கு முகம் கொடுப்பதாக மக்கள் மிக கவலை தெரிவிக்கின்றனர்.

இது சம்பந்தமாக மக்கள் (JDBE chairman) அரசாங்க தோட்டத்தின் அதிகாரிக்கு தெரிவித்த போதிலும், இதைப்பற்றி தமக்கு ஏதும் தெரியாது என அவர் மக்களுக்கு விளக்கம்



> தோட்ட நிர்வாகம், 2019ஆம் ஆண்டு ஒரு குடும்பத்திடம் 3,500 ரூபாய் பணம் பெற்றுக் கொண்டு, அதுக்கு பற்றுச்சீட்டு வழங்கியுள்ளது. தோட்ட காணி அளவீடு செய்வதற்கும், மண் பரிசோதனை செய்வதற்காக இந்தப் பணம் பெற்றுக் கொள்வதாக நிர்வாகம் அறிவித்திருந்தது

தெரிவித்துள்ளார்.

தோட்ட அதிகாரி இந்தப் பணத்தை என்ன செய்தார் என்பதை இதுவரை மக்களுக்குத் தெரியவில்லை என மக்கள் கவலை தெரிவிப்பதோடு அரசாங்கத்துக்கு சொந்தமான தோட்டத்தில் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சின் மூலமாகவே சீர் திருத்தம் மற்றும் நிலம் வழங்கி வீடு திட்டம் செய்யமுடியும்.

ஆனால் தோட்ட நிர்வாகம் மக்களிடம் பணத்தை வாங்கி, இதுவரையில் வீடமைப்பு திட்டம் நிலம் வழங்கும் ஏற்பாடும் செய்யாமல் மக்களை ஏமாற்றியதாக நாகசத்தென்ன தோட்ட மக்கள் கவலை தெரிவித்தார்கள்.



J.E.D.B.
RECEIPT
ORIGINAL
Nagastenne
Date: 4.9.19
Received from Kandasamy Kumaravel H1 ...
State Plantation
Rs. 3500/-
In words Three thousand five hundred Only -
On Account of NBRO/Survey Chgs.
Invoice / Letter No.
Details: NBRO/Survey Chgs.
Rs. 3500-
137
3500-
NAGASTENNA ESTATE

> அரசுக்கு சொந்தமான தோட்டத்தில் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சின் மூலமாகவே சீர் திருத்தம், நிலம் வழங்கி வீடு திட்டம் செய்யமுடியும்





# உதவாக்கரைகள்

## அழகிய துறைநீலாவணை வீதியை குப்பைவீசி அசிங்கப்படுத்துவது குறித்து விசனம்

க. விஜயரெத்தினம்

மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைக் கிராமம்தான் துறைநீலாவணை கிராமமாகும். இக்கிராமம் மண்முனை தென் எருவில் பற்று களுவாஞ்சிகுடி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் பெரியநீலாவணைக்கு மேற்கே அமைந்திருக்கின்றது.

இக்கிராமம் மற்ற கிராமங்களுடன் நிலத்தொடர்புகளுடன் இணைக்கப்படாமல் தனித்துவமாகவும் கலை, கலாசார, பண்பாடுகளுடன் காணப்படுகின்றது. கிழக்கே குளங்களையும் விவசாய நிலங்களையும் வடக்குப் பக்கமும் மேற்குப் பக்கமும் மட்டக்களப்பு வாவியையும் தெற்கே விவசாய நிலங்களையும் கொண்டு அமையப்பெற்றுள்ளது. இக்கிராமத்தில் பலபிரச்சினைகள் காணப்பட்டாலும் ஊருக்கு முன்னே குப்பைகளை வீசிவிட்டு போவது பாரிய பிரச்சினையாகும்.

> மருதமுனை, பெரியநீலாவணை கிராமத்தில் உள்ள மதப்பெரியார்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் துறைநீலாவணை கிராமத்திற்கான வீதியோரத்தில் விட்டு, கோழி, கடைக்கழிவுகளை வீசிவிட்டு செல்வதை தவிர்க்க ஆவன செய்யவேண்டும்

துறைநீலாவணைக்கு பிரதான பாதை கிழக்குப் பக்கமாக காணப்படும் பிரதான வீதியாகும். இப்பிரதான வீதியானது பெரியநீலாவணைக் கிராமத்தின் சந்தியிலிருந்து மேற்குப் பக்கமாக ஊடறுத்து சென்று, கண்ணகி அம்மன் கோவில் வரையும் பிரதான செல்கின்றது. இப்பிரதான வீதியானது சுமார் இரண்டு கிலோமீற்றர் நீளமானதாகும்.

இவ்வீதியில் தெருவிளக்கும் பொருத்தப்பட்டுள்ளது. துறைநீலாவணைக்கு செல்லும் வீதியில் குப்பைகள் வீசுவதும்,வேண்டத்தகாத செயற்பாடுகளும் நீண்ட நாள்களாக இடம்பெற்று வருகின்றன. துறைநீலாவணைக்கு செல்லும் பிரதான வீதியோரத்தில் வீட்டுக்கழிவுகள், கடைக்கழிவுகள், கோழிக்கழிவுகள் இரவுவேளையிலும் அதிகாலை வேளையிலும் வீசப்படுவதாக துறைநீலாவணை பொதுமக்கள், ஊடகவியலாளர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டி விசனம் தெரிவிக்கின்றார்கள்.

இந்தக் கழிவுகளை பெரியநீலாவணை, மருதமுனை கிராமத்தில் உள்ள ஒரு சிலரே இவ்வாறு வீசி வருகின்றார்கள். வீதியில் வெளிச்சம் இருந்தும் துணிச்சலாக வந்து வீசிவிட்டு போகின்றார்கள்.

அடையாளம் தெரியாத நபர்களாலும், சில ஓட்டோக்காரர்களாலும் காலை நேரத்திலும், பகலிலும், இரவுவேளையிலும் குப்பைகளையும் வீட்டுக்கழிவுகளையும் ஏனைய கழிவுகளையும் வீசிவிட்டு செல்கின்றார்கள்.

இதனால் துறைநீலாவணைக்கு செல்லும் வீதியோரம் மோசமான நிலையில் காணப்படுவதாகவும், பழுதடைந்த கோழிக் கழிவுகளை தெருநாய்கள், காகங்கள் எடுத்துச் செல்வதால் வீதியில் பயணிக்கும் பொதுமக்களையும் மாணவர்களையும் அசௌரியங்களுக்கு உள்ளாக்குவதாகவும் கவலை தெரிவிக்கின்றார்கள்.

இச்சம்பவம், சுமார் 20 வருடங்களாக இடம்பெற்று வருகின்றது. இவ்விடத்தில் களுதாவளை பிரதேச சபையால் 'இவ்விடத்தில் குப்பைகள் போட வேண்டாம்' எனப் பெயர்ப்பலகை நடப்பட்ட நிலையில் அதனை பொருட்படுத்தாது மனிதக்கூட்டங்கள், அந்த இடத்தில் குப்பைகளை சூட்சுமமான முறையில் வீசிவிட்டு செல்கின்றார்கள்.

இதேவேளை துறைநீலாவணை கிராமத்துக்குச் செல்லும் பாதையில் சிலர் கஞ்சா புகைப்பது, போதைப்பொருளை புகைத்தல், வீதியோரத்தில் மது அருந்துவது, மதுபோதையில் நடமாடுவது, பாலியல் ரீதியான கசப்பான சம்பவங்கள் போன்ற வேண்டத்தகாத செயற்பாடுகளும், வீதியில் வாகனத்தை நிறுத்தி தூண்டில் போடுதல் போன்ற போக்குவரத்துக்கு பங்கம் விளைவிக்கும் செயற்பாடுகளும் கேட்பார் எவரும் இன்றி அரங்கேற்றப்படுகின்றன.

பொது இடங்களில் போதைப்பொருள் பாவிப்பது குற்றமாக அரசாங்கம் சுற்று நிரூபம் வெளியீட்டும் ஏன் துறைநீலாவணைக்கு செல்லும் வீதியிலே போதைப்பொருள் பாவனையில் ஈடுபடுகின்றார்கள். இதனால் பெண்கள், சிறுவர்கள் அச்சமடைவதாகவும் கவலை தெரிவிக்கின்றார்கள். இதனை தடுத்து நிறுத்தும் உயர் அதிகாரிகள் கண்டும் காணாமலும் இருக்கின்றார்கள்.

இப்பிரதேசத்தில் தமிழர்களும் முஸ்லிம்களும் இன நல்லிணக்கத்துடன் ஒற்றுமையாக வாழ்ந்து வருகின்றனர். ஆனால், அந்த ஒற்றுமைக்கு குந்தகம் விளைவிப்பது போன்று இவ்வாறு குப்பைகளையும் கோழிக்கழிவுகளையும் விலங்குக்கழிவுகளையும் சிலர் வீசிவிட்டு செல்வதால், எதிர்காலத்தில் நல்லிணக்கத்துக்கு பாதிக்கப்படுமா என்ற அச்சநிலை துறைநீலாவணை மக்களிடம் இன்று ஏற்பட்டுள்ளது.

இவ்விடத்திலிருந்து 100 மீற்றருக்கு அண்மையில் விஷேட அதிரடிப்படையினர் முகாம் இருந்தும், படையினரை பொருட்படுத்தாது வீசிவிட்டு செல்கின்றார்கள். இவ்விடயமாக பலதடவைகள் கல்முனை மாநகர சபை மேயருக்கும், களுதாவளை பிரதேச சபை தவிசாளர், செயலாளர், களுவாஞ்சிகுடி பிரதேச செயலாளருக்கும் எடுத்துக்கூறி அவர்களால் அதிரடியான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

இருந்தும் மனதளவில் மாற்றமடையாத சில விஷமிகள்தான், கழிவுகளை சிலருக்கு போக்குவரத்துச் செலவுக்குப் பணம் அல்லது இலஞ்சத்தை கொடுத்து சைக்கிள், மோட்டார் சைக்கிள், ஓட்டோக்கள் ஏனைய வாகனங்களில் ஏற்றிக்கொண்டு வந்து வீசிவிட்டுச் செல்ல தூண்டப்படுகின்றார்கள்.

இதேவேளை, துறைநீலாவணை கிராமத்திற்கு செல்லும் பாதையில் பொருத்தப்பட்ட தெருவிளக்குகளை சிலர் கல்லெறிந்து உடைத்து சேதப்படுத்திய சம்பவம் அண்மையில் பதிவாகியது. தெருவிளக்கு இரவில் ஒளிர்வதால் கால்நடைகள்





> துறைநீலாவணை வீதி தெரு விளக்குகளை சிலர் கல்லெறிந்து உடைத்து சேதப்படுத்திய சம்பவம் அண்மையில் பதிவாகியது. கால்நடைகள் திருடுவதற்கும், போதைப்பொருளை நுகர்வதற்கும் தெருவிளக்கு இடைஞ்சலாக இருக்கிறது

திருடுவதற்கும், போதைப்பொருளை நுகர்வதற்கும் தெருவிளக்கு இடைஞ்சலாக இருப்பதால் சில இளைஞர்கள், கள்ளக்கூட்டம் தெருவிளக்கை சேதப்படுத்துகின்றார்கள்.

பெரியநீலாவணையில் இருந்து துறைநீலாவணைக்கு செல்லும் பிரதான வீதி இரு மருங்கிலும் உள்ள நன்நீர் குளத்தில் குப்பை போடுவதற்கு வந்த நிலையில், கையும் களவுமாக மருதமுனையைச் சேர்ந்த இளைஞன் அண்மையில் பட்டப்பகலில் பிடிபட்டு எச்சரிக்கப்பட்டார்.

இவ்வாறு இன்னொரு ஊரில் குப்பை போடுவதற்கு இவர்களுக்கு அதிகாரம் கொடுத்தது யார் என துறைநீலாவணை மக்களுக்கு தீராத தலையிடியாக இருக்கின்றது.

எனவே மருதமுனை, பெரியநீலாவணை கிராமத்தில் உள்ள மதப்பெரியார்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் சுற்றுச்சூழல் மாசடைவது சம்பந்தமாக உறுதியான நடவடிக்கையை எடுத்து, துறைநீலாவணை கிராமத்திற்கான வீதியோரத்தில் வீட்டுக்கழிவுகளையும் கோழிக்கழிவுகளையும் கடைக்கழிவுகளையும், ஏனைய கழிவுகளையும் வீசிவிட்டு செல்வதை தவிர்க்குமாறு துறைநீலாவணை பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றார்கள்.

அவ்வாறு நிறுத்தாவிட்டால் வீதியோரத்தில் கழிவுகளையும் வேண்டத்தகாத செயற்பாடுகளையும் செய்வோரை களத்தில் நின்று பிடித்து அவர்களை நீதிமன்று ஊடாக நடவடிக்கை எடுக்க துறைநீலாவணை பொதுமக்கள், அமைப்புகளின் பிரதிநிதிகள் காத்திருக்கின்றார்கள்.



# முதலமைச்சர் ஸ்டாலின் திட்டம் செயலூக்கம் பெறுதல் அவசியம்

உள்நாட்டு யுத்தத்தின் போது இடம்பெயர்ந்து உள்ளூர், வெளிநாடுகளில் அகதிகளாக இன்னும் வாழ்ந்துகொண்டிருப்போரின் அவலநிலையைக் கூறுவதற்கு வார்த்தைகளே இல்லை. அந்தளவுக்கு மிகவும் மோசமானது.

வடக்கு,கிழக்கு மற்றும் அதற்கு அப்பால் இடம்பெயர்ந்து இன்னுமே அகதி வாழ்க்கையே பலரும் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். சொந்தக் காணி, பூமியிருந்தும் அங்கு சென்று குடியேற முடியாத நிலைமையில், பலரும் சிக்கி தவித்துக் கொண்டிருக்கின்றனர்.

இடம்பெயந்து கடல்கடந்த நாடுகளுக்குச் சென்றிருப்போர் முகங்கொடுக்கும் கஷ்டங்கள் சொல்லில் அடங்காதவை. அண்டைய நாடான இந்தியாவில் இருக்கும் இலங்கை தமிழர் அகதிமுகாம்களில், இருப்போரின் வேதனைகளும் சோதனைகளும் அவ்வப்போது செய்திகளின் ஊடாக தெரிந்துகொள்ள முடிந்துள்ளது.

இன்னும் சில குடும்பங்களைச் சேர்ந்தவர்களின் பிள்ளைகள் உயர்கல்வியை முடித்துகொண்டு வேலைவாய்ப்புகளுக்காக காத்திருக்கின்றனர். வயதுமுதிந்தோர், நோய்வாய்ப்பட்டவர்கள் இறந்து அந்த மண்ணிலேயே புதைக்கப்பட்டுள்ளனர்.

நாடு திரும்புமாறு அகதிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டாலும், திரும்பியதன் பின்னர், பயங்கரவாத சட்டத்தின் கோரப்பிடிக்குள் வைத்துக்கொண்டு, அவர்களிடத்தில் முன்னெடுக்கப்படும் விசாரணைகளுக்கு அஞ்சி, பலரும் சொந்த நாட்டுக்குத் திரும்புவதற்கு அச்சப்படுகின்றனர்.

சிலர் முகங்கொடுத்த கடந்தகால சில கசப்பான அனுபவங்களைக் கொண்டு, அகதிவாழ்க்கையை விட்டு, நாட்டுக்குத் திரும்ப நினைத்த பலரின் எண்ணங்கள், அகதி வாழ்க்கையே போதுமானது என்ற நினைப்பை ஏற்படுத்திவிட்டுள்ளது. அந்தளவுக்குச் சென்றமைக்கு விசாரணை கெடுபிடிகளே காரணமாகியுள்ளன.

இந்நிலையில், தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சட்டப்பேரவையில், நேற்று (27), இலங்கை அகதிகளின் மேம்பாட்டுக்காக விடுத்திருக்கும் அறிவிப்புகள் வரவேற்கத்தக்கன. அவற்றை செயலூக்கப்படுத்த வேண்டும். அதனூடாக, அகதிகளின் வாழ்க்கையில் ஒளியேற்ற வேண்டும் என்பதே பலருடைய அவாவாகும். இலங்கையில் தமிழர் பிரதேசங்களில் வீடமைப்புக்காக இந்திய மத்திய அரசாங்கம் பல உதவிகளைச் செய்வந்துள்ளது. இந்நிலையில், இலங்கை தமிழர்கள் முகாம்களில் இருக்கும் 7,469 பழுதடைந்த வீடுகள், 231 கோடி இந்திய ரூபாய் செலவில் கட்டித்தரப்படுமென அறிவித்துள்ளார்.

அதுமட்டுமன்றி, அகதிகளின் குழந்தைகளின் கல்விக்காக 5 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படுமென அறிவித்துள்ளார். இத்திட்டங்கள் அமல்படுத்தப்பட வேண்டும். அதனூடாக தமிழகத்தில் இருக்கும் இலங்கை அகதிகள் நன்மைகளை அனுபவிக்கவேண்டும்.

இன்னும் பல வரவேற்கத்தக்க திட்டங்கள், தமிழக முதலமைச்சரின் அறிவிப்பில் உள்ளன. அதில், இலங்கை தமிழர்கள் மீது நிலுவையில் உள்ள வழக்குகளை விரைந்து முடிக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றமை முக்கியமானதாகும்.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர் ஆரம்பிப்பதற்கு சில நாள்களுக்கு முன்னரே, இலங்கை சிறையிலிருக்கும் தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பில், இலங்கை அரசாங்கம் தூசிதட்டும். அமர்வு முடிந்ததன் பின்னர், கைதிகளும் அவர்களது உறவினர்களின் போராட்டங்களும் வலுபெறும்.

இலங்கை தமிழர் அகதிமுகாம்களில் வாழ்வோரின் நலன்களுக்காக தமிழக முதலமைச்சரின் திட்டங்களை வெற்றியடைய வேண்டும் என்பதே எமது பிரார்த்தனையாகும்.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



## வாழ்வியல் தரிசனம்

சுய பாதுகாப்பு என்பது சுயநலம் அல்ல. தன்னைத்தான் தற்பாதுகாப்புக் கொள்வதாகும். இது ஒவ்வொரு பிரஜைக்குமான உரிமை.

எதிர்கால நலனைக் கருதாமல் வாழக்கூடாது. நிகழ்கால உழைப்புக்களே எதிர்கால வரவாகிவிடுகின்றன. மேலும் கல்வியூடாக, நல்ல பதவிகளைத் தேடிப் பெறுதல், சேமிப்பு, பிள்ளைகளின் எதிர்காலத்துக்கான வசதிகளை உருவாக்குதல் எல்லாமே ஒருவருடைய குடும்ப நலனுடன் தனது கடமைகளையும் சரிவப் புரிதலுமாகும். எங்களை நாம் வளப்படுத்துதல் எவர் நலனையும் உறுப்படுத்துதலாகாது. எங்கள் சுய ஆளுமையூடாக கிடைக்கும் நற்பலன்களை ஒத்திவைக்காது உடன் நிறைவேற்றியே ஆகவேண்டும்.

இன்றைய வாழ்க்கைச் செலவு தொடர்ந்தும் உயர்ந்த வண்ணம் இருக்கிறது. எனவே, திட்டமிட்ட வண்ணம் வாழவேண்டியுள்ளது.

கல்வியுடன் இணைந்து உடல்நலன் பேணுவதும் பாரிய போராட்டமாகவுள்ளது. தேகம் நலன் பேணுவதுகூட சுயபாதுகாப்பில் ஒரு ரகம். வாழ்க்கையில், ஸ்திரமாக நிலைநிறுத்துதல் ஒரு சவாலாக இருப்பினும், திடமான எண்ணங்களுடன் தொடர்ந்து சந்தோஷமாக இயங்கினால் எல்லாமே சுலபமாகவே தெரியும். துணிவு, செயலில் தெளிவு எம்மைப் பாதுகாக்கும்.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

# காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதி கோரல்

லக்ஸ்மன்

யுத்தம் மிகக் கடுமையாக அடக்கப்பட்டதனால் மௌனமாகி 12 வருடங்கள் நிறைவு பெற்றுவிட்டது. ஆனால் இன்னமும் நம்முடைய தமிழ் மக்கள் ஐக்கிய நாடுகள் தமக்குரிய நீதியை வழங்குவார்கள் என்ற ஏக்கமான எதிர்பார்ப்புடனேயே இருந்து வருகின்றனர். ஒவ்வொரு வருடத்தினது பெப்ரவரி மாதத்திலும், செப்ரம்பர் மாதத்திலும் இதற்கான எதிர்பார்ப்பு அதிகரித்தே இருப்பதும் ஆவல் உச்சம் பெற்றிருப்பதும் வழக்கம். அதே போன்றே மாற்றங்களும் ஏமாற்றங்கள் நிகழ்ந்துவிடுவதும் வழக்கமாகிவிட்டது.

2020இல் மஹிந்த ராஜபக்ஷவை பிரதமராகக் கொண்ட புதிய அரசாங்கம் உருவாகி கடந்த பெப்பரவரி மாதம் வரையில் இலங்கையில் வெளிநாட்டமைச்சராக தினேஸ் குணவர்தன இருந்தார். செப்டெம்பர் மாதத்தில் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் இருக்கிறார். கடந்த 12 வருடத்தில் 3 ஜனாதிபதிகள் 4 பிரதமர்கள். அதே போன்றே அரசாங்கங்களும் மாறிவிட்டன.

இலங்கையில் மூன்று தசாப்தங்களுக்கு மேலாக நீடித்த உள்நாட்டு யுத்தம் ஏன் என்பதற்கான கேள்வியே இப்போதைக்கு சாதாரணமானதாகிவிட்டது. அதே போன்றுதான் ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கைகளும் இருந்து விடுகின்றன. மிகக் கடுமையான அறிக்கை ஒன்றினை பேரவையின் ஆரம்பத்தில் விடுவதும் இறுதியில் தீர்மானங்கள் பிசுபிசுத்துப் போவதும் நடந்து கொண்டிருக்கின்றது.

ஆனாலும், காணாமல் போனோருக்கான நீதி கோரி நடைபெற்றுவரும் தொடர் போராட்டம் 1700 நாள்களைத் தாண்டி வெற்றி நடைபோடுகிறது. காணாமல் போனோரது உறவுகளும் பலர் இறந்துவிட்டனர். இது தொடர்வது எதற்காக என்பதுதான் கேள்வி. இந்தக் கேள்விக்கான பதில் எப்போதுவரைக்கும் அனைவரையும் காத்திருக்க வைக்கும் என்பதே தெரியாததாக இருக்கிறது.

இலங்கை மீது பொருளாதாரத் தடைகள் மற்றும் பயணத்தடைகளை விதிக்கப்படும் என்றே இந்த வருடத்தின் பெப்பரவரி அமர்வில் எல்லோரும் நம்பினார்கள். ஆனால் அது ஒன்றுமில்லையென்றானது.

இலங்கைக்கு எதிராக 2015 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைப் பேரவையால் பிரித்தானியாவின் ஆதரவுடன், அமெரிக்கா 30/1 தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது. அதற்கு முக்கியமானவராக இருந்த அமைச்சர் மங்கள சமரவீரவை கொரோனா பலியெடுத்துவிட்டது.

இலங்கையில் நடந்து முடிந்த உள்நாட்டு யுத்தத்தின்போது இடம்பெற்றதாக கூறப்படும் மனித உரிமை மீறல்கள், படுகொலைகள் தொடர்பில் வெளிநாட்டு நீதிபதிகளுடன் கூடிய கலப்பு நீதிமன்றமொன்றை அமைத்து விசாரணைகளை நடத்த வேண்டும் என்பதே அத் தீர்மானம்.

காணாமல் போனோரை கண்டறிவதற்கான அலுவலகமொன்றினை நிறுவுதல், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குதல், இராணுவம் வசமுள்ள பொதுமக்களின் காணிகள் விடுவிக்கப்பட வேண்டும், இழப்பீடுகளுக்கான அலுவலகம் என்பதும் அதன் சரத்துக்களில் அடங்கும். இந்த தீர்மானம் நல்லாட்சி எனப்படும் பிரதமர் ரணில் - ஜனாதிபதி மைத்திரி தலைமையிலான அரசாங்கத்தின் இணை அனுசரணையுடன் நிறைவேறியது.

அவர்கள் ஏதோ கொஞ்சமேனும் செய்து கொண்டிருக்கையில் நல்லாட்சிக்குள் பிரதமருக்கும் ஜனாதிபதிக்கும் இருந்த பனிப்போர் குழப்பத்தை ஏற்படுத்தியது. அதனையடுத்து, 2009 மே 19ல் முள்ளிவாய்க்காலில் யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வருகையில் பாதுகாப்புச் செயலாளராகப் பணியாற்றிய கோட்டாபய ராஜபக்ஷ, 2019 ஆண்டு நவம்பரில் இலங்கையின் ஜனாதிபதியானார். அதனையடுத்து 2020 பெப்ரவரியில், ஐ.நா மனித உரிமைப்பேரவையின் 30/1 தீர்மானத்திலிருந்து தாம் வெளியேறுவதாக இலங்கை அரசாங்கம் அறிவித்தது. நல்லாட்சி அரசு தீர்மானத்துக்கு அனுசரணை வழங்கியமை பெரிய தவறு எனச்சுட்டிக்காட்டியதுடன், வெளிநாட்டு நீதிபதிகள் குழு விசாரணை செய்ய முடியாது என்றும் தற்போதைய அரசாங்கம் தெரிவித்தது.

இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட 30/1 பிரேரணைத் தீர்மானம் மிக முக்கியமானதாகவே உலகளவில் வாழும் தமிழர்களாலும் அங்குள்ள அமைப்புக்களாலும் பார்க்கப்பட்டது. இங்கும் அப்படித்தான். இருந்தாலும் இதிலிருந்து விலகிய அரசாங்கம் தமது நல்லெண்ணத்தை வெளிப்படுத்துவதற்கு மாறாக தமிழ் மக்களுக்கெதிரான நடவடிக்கைகளிலேயே தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகிறது. குறிப்பாக வடக்கில் நாடாளுமன்ற பிரதிநிதித்துவங்களைக் குறைத்தது. கிழக்குக்கு தொல்பொருள் செயலணி அமைத்தல் போன்றவற்றினைக் குறிப்பிட முடியும். அதே நேரத்தில் இனப்பரம்பலை மாற்றியமைக்கும் செயற்பாடுகளும் நடைபெறுகின்றன. இவையெல்லம் முடிவின்றித் தொடர்ந்த வண்ணமே இருக்கின்றன.

அரசாங்கத்தினால் வடக்கு, கிழக்கில் மேற்கொள்ளப்படுகின்ற தமிழ் இன அழிப்பிற்கு எதிராகவும் பௌத்த மயமாக்கலுக்கு எதிராகவும் பொத்துவில் முதல் பொலிகண்டிவரை என்ற போராட்டம் நடைபெற்று முடிந்தது. அதனுடன் சம்பந்தப்பட்டவர்கள் இன்னமும் விசாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். வெகுஜன ரீதியான போராட்டம், போரில் இறந்தவர்களை நினைவு கூருதல், மரணமானவர்களுக்கு அஞ்சலி செலுத்துதல் கூட அனுமதியில்லாத நாடு உருவாகியிருக்கிறது. தற்போது இருக்கின்ற கொவிட் சூழலை அவற்றுக்குக் காரணாகக் காட்டுகின்ற நிலைமையும் இருக்கத்தான் செய்கிறது.

ஆயுதப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவந்த ராஜபக்ஷ குடும்பத்தின் கடுமை நல்லாட்சி என்ற அசாங்கம் உருவாக்கப்பட்டு இல்லாமல் செய்யப்பட்டாலும், அது மீண்டும் ஈஸ்ரர் தாக்குதலையடுத்து சிங்கள பெரும்பான்மை மக்களின் மனங்களில் ஏற்படுத்தப்பட்ட பயங்கரவாத அச்சத்தின் ஊடாக நாட்டைக் கைப்பற்றிக் கொண்டது. இப்போது கொரோனா கோரம் கொண்டிருக்கிறது. புதிய அரசு உருவாக்கப்பட்டது முதல் சிறுபான்மை மக்களுக்கு எதிராக பலவேறு செயற்பாடுகளை மேற்கொண்டு சிங்கள மக்களை திருப்திப்படுத்த முனைந்து கொண்டிருந்தது. இருந்தாலும் இப்போது சிங்கள மக்கள் மத்தியில் இந்த அரசாங்கத்திற்கு எதிரான குரல்கள் எழத் தொடங்கியிருக்கின்றன. இது ஒரு வகையில் ஆட்சி மாற்றத்தினையே உருவாக்கும் என்று நம்பலாம். ஆனால் தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்கான தீர்வுதான் ஏக்கமானது.

மனித உரிமை தினம், காணாமல் போனோருக்கான தினம் என்றெல்லாம் உரிமைகள் ஞாபகப்படுத்தப்பட்டாலும் எதுவும் நடைபெறாத ஒரு நாடாக இலங்கை இருந்து வருகிறது. திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம், கால்நடைகளின் மேச்சற்றரை பிரச்சினை, இயற்கை வளங்களை சூறையாடுதல், வன வளத் திணைக்களம், மகாவலி அபிவிருத்தி அதிகார சபையின் காணி பகிர்ந்தளிப்பு, காணாமல் போனோர் விடயம், மனித உரிமை மீறல்கள், மலையக மக்களின் சம்பள உயர்வு, ஜெனீவா தொடர்பான தீர்மானம், தொல்பொருள் ஆராய்ச்சி என்னும் போர்வையில் சிங்கள மயமாக்கல், மதவழிபாட்டுக்கு தடை விதித்தல், பௌத்த விகாரை அமைத்தல் போன்ற செயற்பாடுகள் திட்டமிட்டவாறு விரைவாகவும், சிறப்பாகவும் நடைபெறுகின்றன. இவ்வாறான நிலையில்தான் மக்கள் நாட்டுக்குள் வாழ்க்கை நடத்தும் போது இவற்றில் எதனைப்பற்றிச் சிந்திக்க முடியும்.

இவ்வாறான நிலையில் 1,700 நாள்களைத் தாண்டி நடைபெற்றுவரும் காணாமலாக்கப்பட்டோருக்கு நீதி கோரும் போராட்டம் இவ்வருடத்தின் ஒகஸ்ட் 30லும் நீதியைப்பெறாதென்றே நம்புவோம். கவனத்திலேயே எடுக்கப்படாத ஒன்றாக நம்மவர்களும் கூட கண்டுகொள்ளாத ஒன்றாக நடக்கும் இப்போராட்டம் எதிர்வரும் வருடத்திலேனும் நீதியைப் பெறவேண்டும் என்று வேண்டிக்கொள்வோம்.

தமிழர்கள் அரசிடம் சரணாகதியடைந்து உரிமைகளைத் துறந்து, நடந்தவைகளை மறந்து நடப்பவைகளை காணாது வாழப் பழகிக்கொள்ளல் இந் நாட்டில் சிறப்பானதொரு வாழ்க்கைக்கான வழி என்பதே சிங்கள அரசுகளின் எண்ணமாக இருக்கிறது. இந்தச் சிங்கள இனவாத அரசின் போக்கை கைவிட்டு விட்டு தமிழர்கள் தொடர்பான பிரச்சினைகளை தீர்த்து வைக்க முயற்சிக்க வேண்டும் என்பது தமிழர்களது எண்ணம். அதனை விடவும் அரசாங்கம் குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டு விசாரிக்கப்பட்டு தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்பதும் கூட.

அது நடைபெறுமா என்பது வெறும் எதிர்பார்ப்பே.

நாங்கள் இந் நாட்டின் தேசிய இனம். நாங்கள் இந்த நாட்டில் அடிமையாக வாழ முடியாது. இந்த அரசாங்கத்திற்கு நாங்கள் அடிமைகள் அல்லர். எமக்கு இந்த நாட்டின் உரிமையை அரசாங்கம் வழங்க வேண்டும் என்றே தொடர்ச்சியாகவும் உறுதியாகவும் தமிழர்கள் போராடுகிறார்கள்.

ஓர் இனம் அஹிம்சை ரீதியாக 25 வருடங்களைத் தாண்டிப் போராடி, ஆயுத ரீதியாக 30 வருடங்களுக்கும் மேலாக யுத்தம் செய்து இன்னமும் உறைக்காத விடயமாகிப்போன தமிழர்களுடைய இனப்பிரச்சினையின் ஒரு பகுதியாக இருக்கின்ற காணாமலாக்கப்பட்டோருக்கு நீதி கிடைக்க வேண்டும். அது தமிழர்களுடைய உரிமைகளையும் மீட்டுத் தரட்டும்.

1956களிலிருந்தே திட்டமிட்டு இன அழிப்பைச் செய்து கொண்டு தமிழர்களுக்கெதிராக தொடர்ச்சியான மனித உரிமை மீறல்களை நிகழ்த்தும் நிலையில் நாம் இலங்கையின் நீதியை எதிர்பார்க்க முடியுமா?

## கடிதங்கள்

### ஒதியமலைக்கு பஸ் சேவையின் தேவை

முல்லைத்தீவு, ஒதியமலைக் கிராமத்துக்கு பஸ் சேவை நடத்துவதில் அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் தொடர்ச்சியாக தம்மை ஏமாற்றி வருவதாக ஒதியமலைக் கிராம மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

ஒதியமலைக் கிராமத்தில் தற்போது 80 வரையான குடும்பங்கள் வாழ்கின்றன. 1984ஆம் ஆண்டில், இக்கிராமத்தில் இருந்து மக்கள் முழுமையாக இடம் பெயர்ந்திருந்தனர். 2009ஆம் ஆண்டுக்குப் பின்னரே ஒதியமலைக் கிராமத்தில் மக்கள் மீளக் குடியேற்றம் செய்யப்பட்டனர்.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்திலும் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்திலும் நடைபெற்ற கூட்டங்களில் ஒதியமலைக் கிராமத்துக்கு பஸ் சேவை நடத்துங்கள் என கிராம பிரதிநிதிகளால் கோரிக்கைகள் விடுக்கப்பட்ட போதிலும், இதுவரை நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலகம் தனியார் பஸ் சேவையை ஒழுங்கு செய்த போதிலும், வருமானம் இல்லை என பஸ் சேவை இடம் பெறுவதில்லை. இதன் காரணமாக, ஒதியமலைக் கிராமத்தில் இருந்து ஐந்து கிலோமீற்றர் தூரத்தில் உள்ள நெடுங்கேணி பிரதேச வைத்தியசாலைக்கு செல்வதற்குக் கூட முடியாத நிலைமை காணப்படுகின்றது.

1984ஆம் ஆண்டுக்கு முன்னர் முல்லைத்தீவு நகரத்தில் இருந்து ஒதியமலைக் கிராமத்துக்கு இலங்கை போக்குவரத்து சபையின் பஸ் சேவைகள் நடைபெற்றன. தற்போதைய நிலைமையில் இலங்கை போக்குவரத்து சபையின் பஸ் ஒன்றினையாவது ஒதியமலைக் கிராமத்துக்கு சேவையில் ஈடுபடுத்துமாறு ஒதியமலைக் கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நடராசா கிருஸ்ணகுமார்

# இலங்கையை உலகுக்கு காட்டியவர்

**மர்ஹூம் ஏ.எச்.எம். அஸ்வரின் நான்காவது வருட தினத்தை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகிறது**



எம். இஸட். அஹ்மத் முனவ்வர்



இலங்கை முஸ்லிம்களை குறிப்பாக, இலங்கையை உலகத்துக்குச் சொன்னவர்களுள் ஒருவர்தான் முன்னாள் அமைச்சர் மர்ஹூம் ஏ.எச்.எச்.அஸ்வர். அவரது நான்காவது வருட நினைவு தினம் ஒகஸ்ட் 31 ஆம் திகதி செவ்வாய்க்கிழமையாகும்.

மர்ஹூம் ஏ.எச்.எம் அஸ்வர், 80 வருடங்களுக்கு மேலாக உலகில் வாழ்ந்தவர். கொழும்பு சாஹிராக் கல்லூரியிலே மர்ஹூம் ரீ.பி.ஜாயா, மர்ஹூம் ஏ.எம்.ஏ. அஸீஸ் போன்ற பெருந்தலைவர்கள் மத்தியில் கல்வி கற்று, உயர்ந்து வந்தவர்.

சாஹிராவில் கற்ற காலத்தில், தன்னுடைய குருவாக இருந்தவர்களுள் என்று மர்ஹூம் அறிஞர் எஸ்.எம். கமால்தீன், மர்ஹூம் டொக்டர் அல்லாமா எம்.எம். உவைஸ், மர்ஹூம் எம்.ஏ. பாக்கீர் மாக்கார் போன்றவர்களைச் அடிக்கடி சொல்வார். எதிர்காலத்தில் அதே பாக்கீர் மாக்காருடைய அந்தரங்கச் செயலாளராக இருந்தார்.

1960ஆம் ஆண்டு காலப்பகுதியில் மர்ஹூம்களான டொக்டர் எம்.ஸி.எம். கலீல், ரீ.பி.ஜாயா, சேர். ராசிக் பரீட், பதியுதீன் மஃமூத், பழீல் ஏ. கபூர் போன்ற பெரும் அரசியல் தலைவர்களுடைய காலத்தில் வாழ்ந்து பெற்ற படிப்பினைகள்தான். அடிக்கடி மர்ஹூம் டொக்டர் எம்.ஸி.எம் கலீலை தன்னுடைய அரசியல் குரு என்றும் அரசியல் வழிகாட்டியாக இருந்தவர் மர்ஹூம் எம்.ஏ. பாக்கீர் மாக்கார் என்றும் சொல்லுவார்.

1967ஆம் ஆண்டு ஹிஜ்ரி 1400ஆம் ஆண்டு இலங்கையில் கொண்டாடப்பட்டது. அப்போது முஸ்லிம் சமய கலாசாரத் திணைக்களம் என்று ஒன்று இருக்கவில்லை. இலங்கை இஸ்லாமியர்களுடைய மத்திய நிலையமாக இல்லாமிய நிலையம் என்று முன்னாள் அமைச்சர் மர்ஹூம் எம்.எச். முஹம்மத் தலைமையில் ஓர் அமைப்பு இருந்தது.

ஹிஜ்ரி நூற்றாண்டு விழா கொண்டாட வேண்டும் என்று மர்ஹூம் அஸ்வர் கங்கணம் கட்டி, அந்த விழாவைக் கொண்டாடினார். அவர் நடத்திய அந்த மாபெரும் மாநாடு கொழும்பு சுகததாச விளையாட்டு உள்ளக மற்றும் வெளி அரங்குகளில் இடம்பெற்றது. ஆயிரக்கணக்கான முஸ்லிம்கள் நாடு முழுவதிலும் இருந்து அழைக்கப்பட்டிருந்தனர்.

அங்கே ஹிஜ்ரி 1400ஆம் ஆண்டுக்கான ஞாபகார்த்த முத்திரை ஒன்றும் வெளியிடப்பட்டது. மர்ஹூம்களான டொக்டர் எம்.ஸி.எம். கலீல், எம்.எச். முஹம்மத், எம்.ஏ. பாக்கீர் மாகார், ஏ.ஸீ.எஸ். ஹமீத், பதியுதீன் மஃமூத் என்ற பெரும் தலைவர்கள் இணைந்து இந்தப் பெரும் விழாவை எடுத்தனர். அந்த முத்திரை வெளியீட்டு விழாவின் மூலமாக, முஸ்லிம் சமூகத்தை வெளிப்புறச் செய்தவர்களுள் மர்ஹூம் ஏ.எச்.எம். அஸ்வரும் ஒருவர். முன்னாள் அமைச்சர் மர்ஹூம் எம்.எச். முஹம்மதுக்கு மர்ஹூம் அஸ்வர் பக்கபலமாக இருந்தார். ராபிதுதுல் ஆலமுல் இஸ்லாம் என்ற உலக முஸ்லிம் லீக்கை இலங்கைக்கு எடுத்து வந்தவர்கள் அதன் ஸ்தாபகச் செயலாளர் டொக்டர் பஸ்லுல் ரஹ்மான் அன்ஸாரி. அதேபோல டொக்டர் உமர் நஸீர் போன்றவர்கள். உலக முஸ்லிம் லீக் ராபிதாவுடைய தலைவர் போன்றவர்கள் இலங்கை வருவதற்கு காரணமாக இருந்தவர் மர்ஹூம் அஸ்வர். அவர்களோடு சேர்ந்து உலக நாடுகளுக்கு, உலக மாநாடுகளுக்கு சென்ற பெரும் பாக்கியம் பெற்றவரும் மர்ஹூம் ஏ.எச்.எம். அஸ்வர்.

எம்.எச். முஹம்மத் மரணமானதின் பின்னர்தான் ஏ.எச்.எச். அஸ்வர் மரணமாகின்றார். ஆனால், அவர்கள் காலத்தில் செய்த பணிகளை அடிக்கடி இருவரும் பேசிக் கொள்வர். கல்வித்துறையிலே முஸ்லிம்கள் வீழ்ச்சியடைந்த காலத்தில் மர்ஹூம் கலாநிதி பதியுதீன் மஃமூத் வந்து சேர்கிறார். அவருடனும் இணைந்து அரசியல் பணி செய்தவர்தான் மர்ஹூம் ஏ.எச்.எம். அஸ்வர்.

மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரப் தனிக்கட்சி அமைத்துச் சென்றதால், தனியாக சமுதாயத்தில் இருந்து பிரிந்து சென்றாலும் அவர் கிழக்கிலங்கைக்கு தலைமை வகித்தார். முழு நாட்டுக்கும் தலைமை வகித்த, மர்ஹூம்களான சேர். ராசிக் பரீட், பதியுதீன் மஃமூத் என்ற பெரும் தலைவர்கள் நாட்டிலே இருந்து செய்த பணிகளை எப்போதும் அடிக்கடி ஞாபகப்படுத்தக் கூடிய ஒருவராகத்தான் மர்ஹூம் ஏ.எச்.எம். அஸ்வர் இருந்தார்.

மர்ஹூம் ஏ.எச்.எம் அஸ்வர் ஓர் அரசியல் கலைஞர்; இல்லை, அறிவுக் கலைஞர். அதேபோல் வானொலி, தொலைக்காட்சி கலைஞர். அவர் கடைசி காலங்களில் மஹிந்த அரசை ஆதரிக்கக் காரணம், அரசியலில் அவர் சார்ந்த கட்சி அவரைக் கைவிட்டது.

அவருடைய பணிகளில் இன்னொரு முக்கியமானதொரு நிகழ்வு என்னவென்றால், 2010ஆம் ஆண்டில் யுத்தம் வென்றதன் பின்னர் அப்போதைய ஜனாதிபதியாக இருந்த தற்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, ஐக்கிய நாடுகள் மாநாட்டுக்குச் செல்கின்றார். அப்போது அமைச்சர் மர்ஹூம் ஏ.எச்.எம். அஸ்வரையும் அழைத்துச் செல்கின்றார். அந்த உலக மாநாட்டிலே மஹிந்த ராஜபக்ஷ பேசுவதற்கு நேரம், நாள் என்பன குறிக்கப்பட்டிருந்தன. அப்போது பேசுவதற்கு செவ்வாய்க்கிழமை என்று சொன்னால், திங்கட்கிழமை அந்திநேரத்திலே மர்ஹூம் ஏ.எச்.எம். அஸ்வர் அந்த மண்டபத்துக்குச் சென்று, இரவோடு இரவாக செயலாளரை அணுகி, அங்கே மஹிந்த ராஜபக்ஷ பேசப்போகின்ற அந்தப் பேச்சை ஆங்கிலத்திலும் அரபியிலும் என உலக பாஷைகள் பல மொழிகளிலே முக்கியமாகத் தொகுத்தெடுத்து அவர் ஒவ்வொரு ஆசனத்திலும் போட்டிருக்கிறார். மர்ஹூம் ஏ.எச்.எம். அஸ்வர் ஐக்கிய நாடுகள் மாநாட்டுக்காக அமெரிக்கா சென்றபோது செய்த விடயம் பற்றி, மஹிந்த ராஜபக்ஷ இதன் பின்னர் கேள்விப்பட்டதும் புல்லரித்துப் போனதா கேள்விப்பட்டேன். அப்படி மிகவும் விஸ்வாசமாக நடந்த ஒரு முஸ்லிம் அரசியல் தலைவர்தான் மர்ஹூம் ஏ.எச்.எம். அஸ்வர்.

மர்ஹூம் ஏ.எச்.எம்.அஸ்வர், ஒரு வித்தியாசமான அரசியல்வாதி. அவர் சேர்த்த பொருட்கள் எதுவும் இல்லை. வாழ்ந்த வீடு கடைசி காலங்களில்தான் அவர் கொஞ்சம் விசாலமாகக் கட்டிக் கொண்டார். தன் பிள்ளைகளைக் கூட அரசியல் வாரிசாக அமர்த்திக்கொள்ளவில்லை. என்றாலும், சமூகம், சமயம், சன்மார்க்கம், கல்வி, அரசியல், பொருளாதாரம் என்று எல்லாவற்றிலும் அவர் தலையிட்டு வாழ்ந்தாலும் எதிலும் நிரந்தரமாக இருக்கவில்லை.

மக்களுக்குச் சேவை செய்வது, கொழும்பு சாஹிராவில் மக்களுக்குத் தாராளமாக இடம் பெற்றுக் கொடுப்பது, கல்வியை உயர்த்துவது, அகில இலங்கை முஸ்லிம் லீக் மர்ஹூம் டொக்டர் எம்.ஸி.எம். கலீல், மர்ஹூம் எம்.ஏ.பாகீர் மார்க்கார் இவர்களது சிந்தனையில் வளர்த்தெடுப்பது, குறிப்பாக, அகில உலகத்தோடு இலங்கை முஸ்லிம்களை இணைத்து வைப்பது, ஹஜ் மற்றும் உம்ரா காலங்களில் இலங்கை முஸ்லிம்களுக்காக வசதிகளைப் பெற்றுக் கொடுப்பது, அதிலும் விசேஷமாக மக்காவில் இருந்த 'சிலோன் ஹவுஸ்' இலங்கை இல்லத்தை எப்படியாவது எடுத்து கொடுக்க வேண்டும் என்று மர்ஹூம் அஸ்வர் போராடினார்; பேசினார்; குரல் கொடுத்தார். ஆனால், பிற்காலத்தில் அதற்கு என்ன நடந்ததென்று கூட தெரியவில்லை. இதனால் மர்ஹூம் அஸ்வர் கவலையோடு காட்சி அளித்தார்.

இவை எல்லாவற்றுக்கு மேலாக முஸ்லிம் கலாசார ராஜாங்க அமைச்சராக இருந்த காலத்திலே அவர் சாதித்தவைகள் நிறைய இருக்கின்றன. 1991 ஆம் ஆண்டு முதன்முதலாக அவர் எண்ணம் வைத்து நடாத்திய 'வாழ்வோரை வாழ்த்துவோம்' கலைஞர் தெரிவில், சுமார் 25 பேர் தெரிவு செய்யப்பட்டு, அந்த 25 பேருக்கும் 1991 ஆம் ஆண்டில் பிரேமதாஸ அரசாங்கத்தில் அவர் முஸ்லிம் சமய கலாசார ராஜாங்க அமைச்சர் என்ற வகையிலே ஒவ்வொருவருக்கும் பத்தாயிரம் ரூபாய் பணம் கொடுத்து, பொன்னாடை போர்த்தி, பொற்கிழி கொடுத்து, விசேஷமாக அரபு மொழியிலே பட்டமளித்து, பாராட்டி, கௌரவித்தார். மொத்தமாக 135 பேர் கௌரவிக்கப்பட்டனர்.

அதுமட்டுமல்ல, ஒவ்வொரு வரடமும் ஏப்ரல் முதலாம் திகதி மஸ்ஜித் மதரஸா அபிவிருத்தி நிதியம் ஒன்றை ஆரம்பித்தார். பைத்துல்மால் ஐ பள்ளிவாசல்கள், ஜும்ஆப் பள்ளிவாசல்கள் தோறும் திறந்து வைக்க வேண்டும், ஆரம்பிக்க வேண்டும் என்று ஆலோசனை கூறி அதனை அமுல்படுத்த எத்தனித்தார். அது மாத்திரமல்ல, முஸ்லிம் தர்ம ஸ்தாபனங்கள், வகுப் வோட், முஸ்லிம் சமய கலாசாரத் திணைக்களப் பணிகளை பரவலாக்க வேண்டும் என்ற எண்ணம் வைத்தார்.

இலங்கை முஸ்லிம்கள் குறிப்பாக, தங்களுடைய வரலாற்றை, வாழ்வியலை பதிந்து வைக்க வேண்டும் என்று ஆசை வைத்தார். ஆண்டு தோறும் நடத்துகின்ற மீலாத் விழாக்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் நடத்தப்பட்டு, அந்த மாவட்டத்தின் வரலாற்றை புத்தகமாகப் பதிவு செய்யும் வேலைத்திட்டத்தினை ஆரம்பித்து வைத்தார். இவ்வாறு புத்தளம், அம்பாறை, கம்பஹா, கொழும்பு, கேகாலை, இரத்தினபுரி, மாத்தறை என்றெல்லாம் ஒவ்வொரு மாவட்டத்து வரலாறுகளை வெளியிட்டு இருக்கிறார். இதற்காகவேண்டி அவரது செயலாளராக இருந்த கல்விமான் மர்ஹூம் எஸ்.எச்.எம்.ஜமீலும் மிகவும் பாடுபட்டார்.

இன்று அவர் நம் மத்தியில் இல்லையே என்று கவலைப்படுகிறோம்; ஆதங்கப்படுகிறோம். அவருடைய பணிகளை நாங்கள் தொடர்ந்து செய்ய வேண்டும். மூன்றாண்டுகள் அவரது நினைவு விழாக்களை தொடர்ந்து நடாத்தி வந்தோம். கடந்த ஆண்டில் கொரோனா காரணமாக அகில இலங்கை முஸ்லிம் வாலிப முன்னணிகளின் சம்மேளனத்தின் ஸ்தாபர்களில் ஒருவரான ஏ.எச்.எம். அஸ்வர், அதன் தலைவர் எம்.ஏ. பாகீர் மாகார் ஆகிய இருவரையும் ஞாபகப்படுத்தி, கொழும்பு எல்விடிகல மாவத்தை மண்டபத்தில் 50 பேர் கொண்ட மட்டுப்படுத்தப்பட்ட ஒரு நிகழ்வாக நடத்தினோம்.

அந்நிகழ்வில், ஏழை மாணவர்களுக்கு கல்விப்புலமைப் பரிசில்களும் கொடுத்தோம். இப்படி இருந்து செய்த பணிகளை இந்த ஆண்டும் நினைவுபடுத்தி விழா நடாத்த எண்ணினோம். கொரோனா காரணமாக நடத்த முடியவில்லை.

ஆனால், முக்கியமான கோரிக்கை ஒன்றை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் முன்வைக்கிறோம். அதாவது மர்ஹூம் ஏ.எச்.எம். அஸ்வர் ஞாபகார்த்தமாக அவரது முத்திரைத்தலை வெளியிட்டு அவரைக் கௌரவிக்க வேண்டும் என்றும் இது நான்காவது வருடம் ஐந்தாவது வருடத்துக்குள் இதனை நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் வேண்டுகோளை முன்வைக்கிறோம்.

# இருட்டில் இருந்து வெளிச்சத்துக்கு



வ. சக்தி
shagthivel@gmail.com

இலங்கையில் கடந்த 30 வருடங்களுக்கு மேலாகக் கோரத்தாண்டவமாடிய யுத்தத்தால் பல அப்பாவி உயிர்கள் காவு கொள்ளப்பட்டும், பலர் தங்களது அங்க, அவயவங்ளை இழந்தும் உள்ளார்கள். இவற்றினைவிட விபத்துகள், பேரிடர்கள் மூலமாகவும் பாதிக்கப்பட்டு பலர் தத்தமது அவயங்களை இழந்த நிலையில் வடுக்களைச் சுமந்து கொண்டு இம்மண்ணில் உலாவுகின்றனர்.

தேக ஆரோக்கியமுள்ள மனிதர்கள் பிறரிடம் கையேந்துகின்றார்கள். ஆனாலும் தமது இயற்கை உறுப்புகள் இருந்த காலத்தில் செயற்பட்டதுபோல் தற்போது நடமாடி முடியாத நிலையிலும் தாம் பிறருக்குப் பாராமாக இருந்து விடக் கூடாது என்ற நோக்கத்துடன் மாற்றுத்திறனாளிகள் இழந்த அவயங்களையும் பொருட்படுத்தாது பல கடின உழைப்பாளர்களாகவும், தொழில் முயற்சியாளர்களாகவும் காணப்படுகின்றார்கள்.

இவ்வாறு சுயமாக அவர்கள் முயற்சிகளை மேற்கொண்டாலும் அவர்களுக்குத் தேவையான செயற்கை அவயங்களைப் பெற்றுக் கொள்வதில் பல்வேறு சவால்களையும் இடர்களையும் எதிர்கொள்வதாகத் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில்தான் டென்மார்க் நாட்டில் அமைந்துள்ள வாணி சமூக பொருளாதார சுயமேம்பாட்டு நிறுவனம் மட்டக்களப்பில் அமைந்துள்ள தெரிவு செய்யப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் மட்டக்களப்புக் கிளையின் ஆதரவுடன், கடந்த காலங்களில் பல்வேறு காரணங்களால் கால்களை இழந்த மாற்றுத்திறனாளிகளுக்கு செயற்கை கால்களை வழங்கி வைத்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில், பல்வேறு காரணங்களால் சுமார் 859 பேர் கால்களில் பாதிப்புற்ற மாற்றுத்திறனாளிகள் உள்ளார்கள். அதில், 192 பேர் ஒருகால் அல்லது இரண்டு, கால்களையும் இழந்தவர்களாவர். இவர்களில் தற்போது 14 பேருக்கு மாத்திரம்தான் செயற்கைக் கால்களை வழங்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வு, அண்மையில் மட்டக்களப்பு வெல்லாவெளியில் நடைபெற்றது.

மிகுதியாகவுள்ள கால்களை இழந்த மாற்றுத்திறனாளிகளுக்கு, செயற்கைக் கால்களை வழங்க வேண்டியுள்ளது. இச்சந்தர்ப்பத்தில்தான் அரசாங்கமும், அரச சார்பற்ற அமைப்புகளும் தனவந்தர்களும் மாற்றுத்திறனாளிகளுக்கு மனமுவந்து உதவ முன்வர வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

தற்போது கம்போடியாவின் தரத்துக்கு ஏற்ப செயற்கை கால்களை உற்பத்தி செய்யும் மன்னாரில் அமைந்துள்ள வாழ்வோதையம் அமைப்பினர் இந்த செயற்கை கால்களை தயாரித்துக் கொடுத்துள்ளார்கள். இந்த நல்ல காரியத்துக்கு டென்மார்க்கில் அமைந்துள்ள வாணி எனும் சகோதரி அவருடைய அமைப்பினூடாக நிதி உதவி செய்துள்ளார்.

செயற்கைக் கால்களைப் பெற்றுக்கொண்ட மாற்றுத்திறனாளிகள் இவ்வாறு தெரிவித்துள்ளார்கள். "மாற்றுத்திறனாளிகள் வாழ்வில் மறுமலர்சியை நோக்கிச் செல்ல வேண்டும் என்ற நோக்கத்துடன் மட்டக்களப்பு மாவட்ட அரச அதிகாரிகள் செயற்பட்டு வருவதையிட்டு அகமகிழ்கின்றோம். இன்னும் மாற்றுத்திறனாளிகள் வாழ்வில் பல தேவைகள் உள்ளன. நாங்களும், அனைவரும் எதிர்பார்ப்பது போல் பல சுயதொழில் முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றோம். இருட்டில் இருக்கும் எம்மை வெளிச்சத்தில் தூக்கி விட்டுவதற்கு அனைவருக்கும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இதன் ஒரு கட்டம்தான் தற்போது நடைபெற்றுள்ளது, அதற்காக எமது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்" எனத் தெரிவித்தார்கள்.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் மட்டக்களப்பு கிளைத் தலைவர் தம்பிப்போடி வசந்தராசா தெரிவிக்கும்போது, "மாற்றுத்திறனாளிகள் அதிகம் கஸ்டப்பட்டு அதிக வலிகளைச் சுமந்தவர்களாக சமூகத்தில் காணப்படுகின்றவர்கள். இவ்வாறான நிலையிலும் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள அனேக மாற்றுத்திறனாளிகள் சிறப்பாக சுயதொழில்களில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

இரண்டு கால்களும் உள்ளவர்கள் மற்றவர்களிடம் இரந்து வேண்டிக் கொள்கின்ற இக்காலகட்டத்தில் கால்களை இழந்த இந்த மாற்றுத்திறனாளிகள் இவ்வாறு உழைத்து முன்னேறுவதைப் பார்க்கும்போது மிகவும் மகிழ்ச்சியாகவுள்ளது. இவ்வாறானவர்கள்தான் பலசாலிகள்; இவர்கள் மற்றவர்களுக்கு உதாரணபுரிஷர்களாக வாழ்ந்து வருகின்றார்கள். பல இன்னல்களைத் தாங்கிக் கொண்டு வாழ்ந்து வரும் இவ்வாறான மாற்றுத்திறனாளின் வாழ்வாதாரத்துக்கு மேலும் உதவ வேண்டும். மிகுதியாகவுள்ள கால்களை இழந்தவர்களுக்கும் செயற்கை கால்களை பொருத்துவதற்கு தனவந்தர்கள் முன்வரவேண்டும்"







என்று வேண்டுகோள் விடுத்தார்.

செஞ்சிலுவை அமைப்பின் மட்டக்களப்புக் கிளைத் தலைவரின் கருத்துகளுக்கமைய மட்டக்களப்பு மாவட்டத்திலே பல்வேறு காரணங்களால் சுமார் 859 பேர் கால்களில் பாதிப்புற்ற மாற்றுத்திறனாளிகள் உள்ளார்கள். அதிலே 192 பேர் ஒருகால் அல்லது இரண்டு, கால்களையும் இழந்தவர்கள் உள்ளார்கள் என அறிய முடிகின்றது. ஏனைய மாற்றுத்திறனாளிகளுக்கும் கடந்த காலங்களில் வழங்கிய செயற்கை கால்கள் பழுதடைந்த நிலையில் வாழ்ந்து வருவோருக்கும் அரசாங்கம், தன்னார்வ தொண்டர் அமைப்புகள் உதவவேண்டும் என்பது கட்டாயமாகும்.

டென்மார்க் நாட்டில் அமைந்துள்ள வாணி சமூக பொருளாதார சுயமேம்பாட்டு நிறுவனம் தற்போது முன்வந்தள்ளதுபோல், புலம் பெயர் தேசத்தில் வாழ்கின்ற ஒவ்வொரு தன்னார்வ அமைப்புகளும், தனி நபர்கள்கூட, மட்டக்களப்பிலே வாழ்கின்ற 859 பேருக்கும் உதவ முன்வரும் பட்சத்தில், அது 'காலத்தினால் செய்த உதவி ஞாலத்தில் மாழப் பெரிது' என்பதற்கு எடுத்துக்காட்டாக அமையும்.

இயற்கையாக அல்லது செயற்கையான விடயங்களால் அங்க அவயங்களை இழந்தவர்களுக்கு செயற்கை அவயங்களை இழந்ததென்பது ஈடு செய்ய முடியாததொன்றாகும். அவயங்களை இழந்தவர்களுக்கு செயற்கை அவயங்கள் பொருத்தப்படும்போது அவை அவர்களுக்கு ஏதுவாகவும், இலகுவாகவும் அமையும் விதத்தில் வழங்க வேண்டும்.

"மாற்றுத்திறனாளிகள் பின்னடைவாக இருக்கக்கூடாது அவர்களும் முன்மாதிரியாகத் திகழ வேண்டும். அனேகமாக மாற்றுத்திறனாளிகள் தொழில் முயற்சிகளிலும், ஏனைய வாழ்வாதார செயற்பாடுகளிலும் மேம்பட்டிருக்கின்றார்கள். 'எம்மைவிட மிகவும் வலிதான மனப்பக்குவம் உடையவர்கள் மாற்றுத்திறனாளிகள்'. நாங்கள் எமது சேவைக் காலத்தில் மக்களுக்குத் தேவையான அனைத்து சேவைகளையும் மேற்கொள்ள வேண்டும் என்ற நோக்கத்துடன் நாமும் செயற்பட்டு வருகின்றோம்" என போரதீவுப்பற்றுப் பிரதேச செயலாளர் ஆர்.ராகுலநாயகி தெரிவிக்கின்றார்.

பிரதேச செயலாளர் தெரிவிப்பது போன்று அரச இயந்திரமும், அரச சார்பற்ற அமைப்புகளும், வடுக்களைச் சுமந்து நிற்கும் மக்களின் குறைகளைத் தீர்த்து வைக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் செற்பட வேண்டும் என்பதுவே அனைவரின் எதிர்பார்ப்பாகவுள்ளது.

இயற்கையாகவோ அல்லது மனித நடவடிக்கை மூலமாகவோ பாதிப்புறும் மக்களுக்கு ஆதரவு வழங்குவது துறைசார்ந்தவர்களின் தலையாய கடமையல்லவா?

எனவே துறைசார்ந்தவர்களும், தனவந்தர்களும் தன்னார்வ அமைப்புகளும் முன்வந்து மாற்றுத்திறனாளிகள் வாழ்விலும் மறுமலர்ச்சியை ஏற்படுத்த முன்வர வேண்டும்.





# கறுப்பு மணலின் கறுப்பாடுகள்



நடராஜன் ஹரன்



அண்மைக்காலமாக கிழக்கில், இல்மனைட் எனும் கறுப்பு மணல் அகழ்வது தொடர்ப்பான சர்ச்சைகளும் இதற்கு எதிரான மக்கள் எழுச்சிகளும் இடம்பெற்று வருகின்றன. இன்று இலங்கையில் மட்டுமன்றி, உலகில் அனைத்து பகுதிகளிலும் இயற்கையின் இருப்பைக் கேள்விக்குட்படுத்தும் சம்பவங்கள் அதிகமாக இடம்பெற்று வருகின்றன.

இயற்கை எமக்களித்த வளங்களை நாம் துஸ்பிரயோகம் செய்ய எப்பொழுது ஆரம்பித்தோமோ, அப்பொழுதில் இருந்தே, எமக்கு இன்னல் கொடுக்கத் தொடங்கியது. தாமே தமது கண்களைக் குத்திக்கொள்ளும் மூடர்களாக, மனித குலம் வெறும் பணத்துக்காக அனைத்தையும் இன்று இழந்து நிற்கின்றது.

எம்மை ஆட்டிப்படைக்கும் கொரோனா வைரஸ், வாழ்க்கையின் தத்துவத்தை எமக்கு உணர்த்திய பின்னரும், இதுவரை நாம் இன்னும் மாறாமல் இருக்கிறோம்; இனிமேலும் என்றும் நாம் மாறமாட்டோம் என்பதையே அண்மைய போக்குகள் நன்கு உணர்த்தி நிற்கின்றன.

அம்பாறை மாவட்டம், பொத்துவில் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட முருகந்தனை கடலை அண்டிய பகுதியில் சட்டத்துக்கு முரணாக, எந்தவோர் அனுமதியும் இன்றி, கரையோர பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவரது தலைமையில் கனிய வள இல்மனைட் ஆராச்சியில் ஈடுபட்டுள்ளார்கள் என இப்பகுதிவாழ் மக்கள் விசனம் தெரிவித்து போராட்டங்களையும் மேற்கொண்டிருந்தார்கள்.

எனவே, அனுமதிகள் பெறப்படாமல் களவாக இடம் பெறும் இச்செயற்பாடுகளை உடனடியாக நிறுத்துமாறும் எமது பகுதி சூறையாடப்படுவதை தடுத்து நிறுத்துமாறும் எமது பிரதேசத்தைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் இப்பகுதிவாழ் மக்கள் தொடர்ந்து வேண்டுகோள் விடுத்துவருகின்றார்கள்.

திருக்கோவில் பிரதேசத்தில் மேற்கொள்ளப்படவுள்ள இல்மனைட் அகழ்வு காரணமாக பிரதேச மக்கள் பெரும் பாதிப்புகளை எதிர்கொள்ள நேரிடும் என்பது உலகளவில் நிருபிக்கப்பட்ட உண்மையாகும். பாலைவனமாகும் ஆபத்தில் இருந்து கிழக்கு மண்ணைப் பாதுகாத்து, இப்பிரச்சினைகளிலிருந்து விடுபட, இத்தகைய நடவடிக்கைகளை எதிர்த்து போராட பொதுமக்கள் ஒன்று சேரவேண்டும் என, பொது மக்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு மக்கள் கேட்டுக்கொள்கின்றனர்.

திருக்கோவில், தம்பிலுவில், வினாயகபுரம், உமிரி பகுதியில் வானுயர வளர்ந்துள்ள தென்னை அனைத்தும் இத்தகைய அகழ்வு நடவடிக்கையால் படிப்படியாக அழிந்துவிடும்; பல நூற்றுக்கணக்கான மக்களின் வாழ்வாதாரம் அழிந்துவிடும் ஆபத்து காத்திருக்கின்றது.

இல்மனைட் வழக்கமாக 'நிர்வாணச் சுரங்க முறை'யில் எடுக்கப்படுகிறது. அதாவது புவிப் பரப்பின் மீதுள்ள அனைத்துத் தாவரங்களும் அழித்தொழிக்கப்பட்டு, பூமியை நிர்வாணமாக்கி, தாதுக்களைத் தோண்டியெடுக்கிறார்கள். மேல் மண்ணை அகற்றி வைத்துவிடுவார்கள். தாதுப்பொருள் அடங்கிய கீழ் மண் எவ்வளவு ஆழம்வரை கிடைக்கிறதோ அதனை எடுத்து முதல் கட்டச் சுத்திகரிப்புக்கு அனுப்புவார்கள்.

கிழக்கு மண்ணில் ஆறு மீற்றர் முதல் 20 மீற்றர் ஆழம் வரை தோண்டப்படும் எனத் தகவல்கள் கிடைத்துள்ளன. நமது அரசியல்வாதிகள், கட்டுப்பாட்டு அமைப்புகளின் பணப்பசியைப் பார்க்கும்போது, எவரும் எவ்வளவு ஆழம் அகழ்வு செய்யப்படுகின்றது என்பதை கண்டும் காணாமல் இருப்பார்ககள் என்பதைப் புரிந்துகொள்ள முடிகின்றது.

நிர்வாணச் சுரங்கம், உள்ளூர்ச் சுற்றுச்சூழல்மீது நேரடித் தாக்கத்தை ஏற்படுத்தும். ஆழமாகத் தோண்டுவது நிலத்தடி நீர்வளத்தைப் பாதிக்காது என்றாலும், நிலத்தடியை ஒட்டிய ஆழம்குறைவான நீர்வளமும் ஓடைகளும் வடிகால்களும் குளங்களும் மறைந்துபோக நீர்வளம் குறைய ஆரம்பிக்கும்.

> **திருக்கோவில், கோமாரி, வினாயகபுரம், தம்பிலுவில் பகுதி செழிப்பிழந்து, அழிந்து, மதிப்பிழந்து போயிருக்கும்**

நிலத்தின் மீதுள்ள தாவரங்கள் அகற்றப்படும்போது, வெப்பம் நேரடியாகப் பூமியைத் தாக்கும். அருகாமைக் கடலிலிருந்து வரும் குளிர்ந்த காற்று வெப்பமடையும். இதன் காரணமாக உள்ளூர் மழையின் அளவும் தன்மையும் முறையும் மாற்றமடையும்.

அனைத்தையும்விட மிக முக்கியமானது, கடல் அருகாமையில் இருப்பதால் நிலத்தடியில் கடல் நீர் புகுவதாகும். இதனால் குடிப்பதற்கும் வாழ்வதற்குமான நீர் அரிய பொருளாகிவிடும். நிர்வாணச் சுரங்கத்தால் எழும் தூசு அருகாமைத் தாவரங்களில் படிந்து ஒளிச்சேர்க்கையைத் தடுத்து, இருக்கும் பசுமையையும் சாகடிக்கும்.

நண்டு இனம் முற்றாக அழிக்கப்படும். வினாயகபுரம் பகுதியில் கண்டல் தாவரங்கள் அழிவடையும். இதனால், இறால் வளம் முற்றாக அழியும். இதனை நம்பி தொழிலில் ஈடுபடும் நூற்றுக்கணக்கான குடும்பங்கள் வாழ்வாதாரத்தை இழப்பர்.

உலகில் பாதுகாக்கப்பட வேண்டிய இனமாக அறிவிக்கப்பட்ட கடலாமைகள் முட்டையிட்டு இனம்பெருக்கும் நம் அழகிய திருக்கோவில், கோமாரி கடற்கரைகளுக்கும் இதே நிலைமைதான் ஏற்படப்போகின்றது.

இயற்கையான அமைப்பை நாம் தொந்தரவு செய்யாத வரையில், கதிரியக்கத் தனிமங்களின் நிலைத்தன்மை பாதிக்கப்படாதவரையில் அவை அபாயகரமான கதிரியக்கத்தை வெளிப்படுத்துவதில்லை.

தோண்டி எடுத்து அவற்றைப் பிரித்தெடுத்துச் சுத்தம் செய்யும் போது, அவை கதிரியக்கத்தை வெளிப்படுத்துகின்றன. அதன் காரணமாகத் தொழிலாளர்களும் அருகாமை மக்களும் புற்று நோய், குறையுள்ள குழந்தைப் பிறப்புகளுக்கு ஆளாகிறார்கள். (கேரளாவில் கொல்லம் மாவட்டத்தில் பரவலான ஆரோக்கியக் குறைவை ஏற்படுத்தியுள்ளது)

எவ்வளவு கஷ்டமான சூழ்நிலையிலும், ஒருவனை அவன் காலம் காலமாக வாழ்ந்த இடத்திலிருந்து அகதியாக அவனை இன்னுனோர் இடத்துக்கு துரத்துவது கொடுமையானது. ஆனால், அதைச் செய்வதற்கு தற்பொழுது அனைவரும் ஒன்று திரண்டிருக்கின்றனர். அவர்கள் அனைவரும் இந்தப் பகுதியை ஏதோ பாலைவனம் போல மாற்றப் போகிறார்களா?

இல்மனைட் ஆலையில் இருந்து வெளியேறும் இரும்பு குளோரைடு மற்றும் அமிலக் கழிவுகள் சுற்றியுள்ள நிலத்தையும், நிலத்தடி நீரையும் பாழ்படுத்த வாய்ப்பிருக்கிறது. ஆலையில் பிரித்தெடுக்கப்படும் ஜிர்க்கான் கனிமம் கதிரியக்கத் தன்மையைக் கொண்டிருப்பதால் ஆலையை சுற்றி 20 கிலோ மீற்றர் தூரத்திற்குள் வாழும் மக்களுக்கும், உயிரினங்களுக்கும் மரபணு நோய்களும், பல்வேறு வகைப் புற்றுநோய்களும் (தமிழ்நாட்டில் கன்னியாகுமரி, மணவாளக்குறிச்சியைச் சுற்றி வாழும் மக்களைப் போல) உருவாக வாய்ப்பிருக்கிறது.

கேரளாவில் சவரா என்னும் ஊரில் கேரளா மினரல் & மெட்டல் என்னும் நிறுவனம் இல்மனைட் ஆலையை நடத்தி வருகிறது. அந்த ஆலையிலிருந்து வெளியேறிய கழிவுகள் நிலத்தடி நீரை மாசுபடுத்திவிட்டன என்று உச்ச நீதி மன்றக் கண்காணிப்புக் குழு 2004இல் குற்றஞ்சாட்டியது.

2006 ஒகஸ்ட்டில் சீனாவின் ஜிங்சூ மாகாணத்தில் இல்மனைட் ஆலை நானி ஆற்றில் 3,000 தொன் சுத்திகரிக்கப்படாத கழிவை வெளியேற்றிய குற்றத்திற்காக மூடப்பட்டது. அந்தக் கழிவு ஆற்றைக் கொன்று போட்டது. ஆற்றங்கரையில் உள்ள ஊர்மக்கள் அனைவரும் பாதிக்கப்பட்டனர்.

அவர்கள் போராடினார்கள்; தடுத்தார்கள். ஆனால், இங்கு, அரசியல் கட்சிகள் அனைத்தும் இந்த டைட்டானியத் தொழிற்சாலையால் ஏற்படும் பாதிப்புகள் குறித்த விவரங்களைப் பார்க்கத் தவறுகின்றன.

இதில் முன்நிற்பவர்கள் அரசா, குறித்த நிறுவனமா என்பது முக்கியமல்ல. யார் தோண்டினாலும் இல்மனைட் 30 ஆண்டுகளில் தீர்ந்துபோகும். அகழ்வு நடவடிக்கையில் ஈடுபட்டவரும் உலகப் பணக்காரர்களில் மிக முக்கியமான இடத்தைப் பிடித்துவிடுவார். அதே சமயம் திருக்கோவில், கோமாரி, வினாயகபுரம், தம்பிலுவில் பகுதி செழிப்பிழந்து, அழிந்து, மதிப்பிழந்து போயிருக்கும். 'இன்றே செய் அதை நன்றே செய்; ஒன்றுபட்டால் உண்டுவாழ்வு; இல்லையேல் நம் அனைவருக்கும் சாவுதான்.




# பாலம் இல்லாத பயணங்கள்



எப். முபாரக்





திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் பிரதேசத்தின் வேதத்தீவுக்கான பாதை இன்மையால் தொழிலுக்காக காட்டுக்கு விறகு எடுப்பதற்காக ஆற்றைக் கடந்து சென்ற போது முதலை கடித்ததில் தொழிலாளி ஒருவர் காயங்களுடன் வாழ்ந்து வருகின்றார்.

கடந்த காலத்தில் தமது ஜீவனோபாய தொழிலாக விறகு எடுப்பதற்காக வேதத்தீவு ஆற்றினை கடந்து சென்ற போதே நான்கு பிள்ளைகளின் தந்தையொருவர் முதலைக் கடிக்கு உள்ளானார்.

தற்போது அவ்தொழிலாளி ஊனமுற்ற நிலையில் சிரமத்திற்கு மத்தியில் தமது வாழ்வாதாரத்தை முன்னெடுத்துச் செல்கின்றார்.

சிறந்த பாதை வசதிகள் போக்குவரத்து செயற்பாடுகள் இன்மையால் இப்பகுதியில் இவ்வாரான சம்பவங்களும்,சிரமங்களையும் அப்பகுதி மக்கள் எதிர்கொள்கின்றனர். பாடசாலை செல்லுகின்ற மாணவர்கள் குறிப்பிட்ட நேரத்திற்கு பாடசாலைக்கு சமூகம் தரமுடியாத நிலை ஏற்படுகின்றது,

அதுமாத்திரமின்றி கடந்த காலங்களில் கடும் மழை மற்றும் வீசிய காற்றினால் திருகோணமலைக்குச் சென்று தமது வீட்டுக்கு தோணியில் பயணித்த போது ஏற்பட்ட அனர்த்தத்தில் இருவர் நீரில் மூழ்கி உயிரிழந்த சோகமயமான சம்பவங்களும் நடைபெற்றுத்தான் உள்ளன.

வேதத்தீவு மக்கள் போக்குவரத்துகளை மேற்கொள்வதில் பல சிரமங்களை மேற்கொண்டு தான் வருகின்றார்கள். தமது அன்றாட செயற்பாடுகள் தேவைகளை நிறைவேற்றுவதாக இருந்தால் மூதூருக்குச் செல்ல வேண்டும். அல்லது கிண்ணியாவுக்கு செல்ல வேண்டும் எங்கே செல்வதாக இருந்தாலும் வேதத்தீவு ஆற்றினை கடந்து செல்ல வேண்டும். தோணிகளையோ அல்லது பாதைகளையோ எதிர்பார்த்து காத்திருந்து தமது பயணங்களை நிறைவேற்ற வேண்டும்,

மகாவலி கங்கையிலிருந்து ஆரம்பித்து வருகின்ற ஆறானது ,வேதத்தீவு ஆற்றோடு கலந்து மூதூர் கொட்டியாரக்குடா கடலுடன் சங்கமிக்கின்றது.

கடந்த நல்லாட்சி அரசாங்கத்தில் வேதத்தீவு பாலம் அமைப்பதற்காக விலைமனுக்கள் மற்றும் ஒப்பந்தங்கள் கோரப்பட்ட போதிலும் இடை நடுவில் , ஆட்சி மாற்றங்களால் கைவிடப்பட்டதும் குறிப்பிடத்தக்கதாகும். மூதூர் வேதத்தீவு கிராமத்திற்கான பாலம் எப்போது அமையும்.

> **நல்லாட்சி அரசாங்கத்தில் வேதத்தீவு பாலம் அமைப்பதற்காக விலைமனுக்கள், ஒப்பந்தங்கள் கோரப்பட்ட போதிலும் இடை நடுவில் , ஆட்சி மாற்றங்களால் கைவிடப்பட்டது. மூதூர் வேதத்தீவு கிராமத்திற்கான பாலம் எப்போது அமையும்?**

ஒரு நாட்டின் அபிவிருத்தியையும்,பொருளா தாரத்தினையும் மேன்மையடையச் செய்வது சிறந்த போக்குவரத்துக்களாகும்.இலங்கையில் போக்குவரத்து துறைகள் வளர்ச்சியடைந்திருந்தாலும் ஒரு சில மாவட்டங்களில் இல்லாமலும் இருக்கின்றது.

அவ்வாறு ஒரு பிரதேசத்திற்கான போக்குவரத்து வசதிகள் ஏற்படுத்தப் படாத ஒரு கிராமத்தின் கதையே இது.

திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட வேதத்தீவு, முதிரையடி முனை, மஜித் நகர், சாறாடசேனை, ஒட்டு மடம் போன்ற கிராமங்களில் கடந்த ஐம்பது வருடங்களுக்கு மேலாக வசித்து வரும் மக்களின் போக்குவரத்து செயற்பாடுகள் அன்றும் இன்றும் அவஸ்தை நிறைந்ததாகவே காணப்படுகின்றது. மேற்படி மக்கள் வேதத்தீவு ஆற்றுவழிப் பயணத்தில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். இதனை இப்றாகிம் துறை என்று இது அழைக்கப்படுகின்றது.

வாழ்வாதாரத்திற்காக இப்பகுதி மக்கள் பெரிதும் கஷ்டப்படுகின்றனர். இக்கிராம மக்கள் கடந்தகால அசாதாரண சூழலினால் இடம்பெயர்ந்து வாழ்ந்து பின்பு இப்பகுதியில் குடியேறி தம் சொந்த மண்ணில் தற்போது வாழ்ந்து வருகின்றார்கள்.

சுமார் ஐம்பது மீற்றர் தூரத்தினை கொண்டு இது அமைந்துள்ளது. இந்த தூரத்தில் பாலம் அமைக்கப்பட்டால் அப்பகுதி மக்களின் போக்குவரத்து சிறப்பாக அமையும்.

மக்களின் வாழ்வில் போக்குவரத்தானது மிக அவசியமானதாகும். இவ்வாரான நிலையில் வாழும் மக்களுக்கு பெரும் சிரமமாக இருப்பது தான் இந்த ஆற்றுவழிப் போக்குவரத்தாகும். இப்பயணத்தில் உயிர் ஆபத்து ஏற்படும் என்ற அச்சம் மக்கள் மனதில் என்றும் குடிகொண்டு காணப்படுகின்றது.

தமிழ், முஸ்லிம் மக்கள் இங்கு வாழ்ந்து வருகின்றார்கள். இக்கிராம மக்களின் தொழில்களாக நன்னீர் மீன்பிடி,தோட்டப் பயிர்ச்செய்கை, விவசாயம், காட்டுத்தொழில்கள் காணப்படுகின்றன. இந்த ஆற்றைக் கடக்க ஆரம்பத்தில் மாத்தோணிகள் பயன்படுத்தத்தட்டன,

கடந்த காலங்களில் அப்பகுதி மக்கள் தோணியில் பயணித்த போது குடை சாய்ந்ததில் இருவர் பலியான சம்பவங்களும் நடந்தேறியுள்ளன.

அப்பகுதி மக்கள் அதிகளவில் குடியேறிய பின்னேரே வீதி அபிவிருத்தி திணைக்களம் மூலமாக மோட்டார் படகுப் பாதை ஒன்று சேவைக்கு விடப்பட்டது.

மோட்டார்படகுப் பாதை மக்களுக்கு மன நிம்மதியை கொடுத்தது ஆனாலும் வெள்ளப்பெருக்கு மற்றும் மழை காலங்களில் உயிரை கையில் பிடிக்க வேண்டிய அச்சம் ஏற்பட்டது. தற்போது அம்மோட்டார் படகுப் பாதையும் பழுதடைந்து, கட்டை ஏறிய நிலையில் சிறிய தோணிகளை இணைத்து அங்கும் இங்குமாக இழுவைக் கம்பிகளை தொடுத்து பயணம் மேற்கொள்ளப்படுகின்றது. படகுப் பயணமும் ஆபத்தானது. இந்நிலையில் இதற்கான ஒரு பாலம் அமைக்கப்பட வேண்டுமென பலருக்கும் திட்டம் தோன்றியது.

ஜனாதிபதி தேர்தல் என்றாலும்,பொதுத் தேர்தல் மற்றும் உள்ளூராட்சி மன்ற தேர்தல்கள் என்றாலும் வேதத்தீவு பாலத்தினை காட்டியே வேட்பாளர்களின் பேச்சுகள் இருக்கும். தாம் ஆட்சிக்கு வந்தவுடன் அமைத்துத் தருவோம் என்பார்கள். ஆனால் இன்னமும் ஒரு கற்களை கூட நாட்ட வில்லையென அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த நல்லாட்சி காலத்தில் அமைச்சர்கள், பொறியியலாளர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், திட்டமிடல் மதிப்பீட்டாளர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், உள்ளூராட்சி அரசியல் தலைவர்கள் பலரும் படையெடுத்து வந்து பார்வையிட்டனர்.

ஒரு சில அமைச்சர்களினால்

அடிக்கற்களும் நாட்டப்பட்டு ஊடகங்களில் பேசுபொருளாகவும் ஒரு காலத்தில் காணப்பட்டது. இது மக்களுக்கு ஏற்பட்ட பெரும் நம்பிக்கையாக காணப்பட்டது. பாலம் ஒன்று புதிதாக அமையப் போகின்றது என்று மன நிம்மதி இருந்தது.


ஆனால், கடந்த நல்லாட்சியில் பெரும் ஏமாற்றமாகிப் போனது. தற்போது ஆட்சிக்கு வந்துள்ள பொது ஜன பெரமுன ஆட்சியில் தான் பாலம் அமையும் என்ற முழு நம்பிக்கையுடன் அப்பகுதி மக்கள் எதிர்பார்த்து இருக்கின்றார்கள்.

அண்மையில் திருகோணமலை மாவட்ட பொது ஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர்களும் பார்வையிட்டு வேதத்தீவுக்கான பாலத்தினை விரைவில் அமைக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார்கள். அப்பகுதி மக்களுக்கு எந்த அரசாங்கத்தால் பாலம் அமைக்கப்பட்டாலும் சரி மக்களுக்கான வேலை நடைபெற்றால் சரி என்ற நிலைப்பாட்டில் உள்ளார்கள்.

சிறிய தோணிகள் மூலமாக வெள்ளப்பெருக்கிற்கும் முதலைகளுக்கும் அஞ்சி பயணம் செய்யும் ஆபத்தான ஆற்று வழிப் பயணமாக இது காணப்படுகின்றது.இந்த ஆபத்தான நிலை மாற வேண்டும். பாலம் ஒன்று அமைக்கப்படல் வேண்டும் என்பது மக்களின் நீண்டகால கோரிக்கையாகும்.

இக்கிராமத்தினை சூழவுள்ள பகுதிகளில் வசிக்கும் நூற்றுக்கணக்கான மக்களின் எதிர்பார்ப்பு தேவையும் இதுவாகவே உள்ளது. வேதத்தீவுக்கான பாலம் எப்போது அமையப்பெரும் என்ற எதிர்பார்ப்பில் அப்பகுதி மக்கள் காத்திருக்கின்றார்கள்.





விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் சனிக்கிழமை, 28 ஓகஸ்ட் 2021, இல. 8, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.